[illegible]

[illegible] [illegible]

[illegible]


[illegible]
[illegible], N22 SN
N34.7.7
186936

474
REGD. NO. M. 474

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 APR 1935
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ. § ஸ்ரீமுக—மாசி: 1934—பிப்ரவரி § திங்கள் எ.


| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| க. | தெய்வச் செந்தமிழினுந் திருத்தமா? | 137 |
| உ. | தமிழன்பர் மகாநாடு | 145 |
| ௩. | சிவபேதங்களும் பதிபேதங்களும் | 151 |
| ௪. | கனவு மெய்யே | 152 |
| ௫. | சிவோத்கர்ஷம் | 154 |
| ௬. | 'ஐயர்' என்னும் சொல்வழக்கு | 156 |
| எ. | ஐ ய வி ஞ | ,, |
| அ. | பாண்டித்துரை | 157 |
| ௯. | மகா சிவராத்திரி | 158 |
| ௰. | செந்தமிழ்ச் சைவத் திருத்தொண்டர் | 159 |
| ௰க. | 'சிவநேசன்' அறிவிப்பு | 160 |
| ௰உ. | கடவுளும் காந்தியும் | ,, |
| ௰௩. | சிவநேசனுக்கு வாழ்த்து | ,, |
| ௰௪. | பழமலைக் கோவை | (25—32) |


ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:—தைமீ ய, கக, கஉ௳ களில் பெருமழை பெய்து ஏரிகுளங்களில் நீர் பெருகிச் செழிப்புற்றது. குமாரவிநாயகர் திருக்கோயிலிலும் சிவாலயத்திலும் இம்மதி க௳ மகாசிவராத்திரி வைபவமும், கஎ௳ குமாரவிநாயகர் திருக்கோயிலில் நடராஜாபிடேகமும் நடைபெறும்.

குன்றக்குடி:—ஸ்ரீவல்லிதேவசேனாசமேதராக விளங்கும் ஆறுமாமுகத்து அண்ணலார்க்குத் தை அ௳ காப்புக்கட்டி, க௬௳ தேர்த் திருவிழாவும், கஎ௳ பூசத்திருநாளன்று தேனாற்றில் தீர்த்தவாரியும், பழநியாயி ஊருணி மண்டபப்படியும், தெப்போற்சவமும் வழக்கம்போற் சிறப்பாக நடைபெற்றன. திருவேலன்குடி கந்தசாமிக் கோயிலிலிருந்தும் சுவாமி தேனாற்றுக்கு வந்து வழக்கம்போல் தீர்த்தங் கொடுத்தருளினர்.

காரைக்குடி:—டாக்ட்டர் திரு. எஸ். சுப்பிரமணியம் M. B. & B. S. அவர்கள் வைத்தியசாலையில், எக்ஸ்ரே(உடற்கூறறியும்)கருவிஸ்தாபனம் கனம் டாக்ட்டர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்களால் தை ச௳ திறந்துவைக்கப் பெற்றது.

மீனாட்சி சுந்தரர் வித்தியாசாலையில் சென்னை அட்வகேட் ஸ்ரீமான் டி. என். சேஷாசலமையர் B. A. B. L. அவர்கள், தை ச, ரு௳களில், கம்பராமாயணக் கட்டுரை நிகழ்த்தினர். இருவாரத்துக் கொருமுறை யிருதினங்கள் தொடர்ந்து நடத்துவதாக மேற்கொண்டுள்ளார்கள்.

ஆவினிப்பட்டி:—விவேகாநந்தர்கல்விக்கழகத்தின் ஏழாம்ஆண்டு எட்டாம்மாதக்கூட்டம் தை உ௬௳ கீழைச்சிவப்பட்டி திரு. லெ. முத்தரசப்ப செட்டியாரவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. மாணவர் கடவுள் வாழ்த்துப்பாடினர். "அப்பர் பெருமை, தருமிக்குப் பொற்கிழி அளித்தது, முயற்சி திருவினை யாக்கும், அருள்விளக்கம், விடாமுயற்சி, பொய்சொல்லலாகாது, புத்திரர்கடமை, மாறாதஅன்பு, பெருமுயற்சி, பொறுமை" என்னும் பொருள்பற்றிய சொற்பொழிவுகள் செவ்விதின் ஆற்றினர். தலைவரவர்கள் தமிழருமை, மாணவர்கற்கவேண்டியமுறை, பெற்றோர் கடமை, ஆசிரியர்பெருமை என்பனபற்றித் திட்டமுறு முடிப்புரை பகர்ந்தார்கள். ஆசிரியர் வந்தனமளிக்கச் சபை நிறைவுற்றது.

தஞ்சை:—சைவசித்தாந்த சபையின் நான்காம் ஆண்டு நிறைவுவிழா தை உஉ௳ பிற்பகல் இச் சபைத் தலைவரும் திருவையாறு டிஸ்டிரிக்ட்முன்சீபும் ஆகிய உயர்திரு வ. சு. சண்முகம் பிள்ளை B. A. B. L. அவர்கள் தலைமை வகிக்க, திருமூல நாயனார்—நீலகண்டர் தெருவும் ஆலமுண்டானரும்—எவ்வகைச் சமயமும் ஏற்கும் எம்சைவம்' என்பன பொருளாக முறையே தமிழாசிரியர்களாகிய திருவாளர்கள் விருத்தாசலம் பெரியசாமி பிள்ளை—அ. மு. சரவண முதலியார்—பா. சிவகுருநாத பிள்ளை ஆகிய மூவரும் விரிவுரை நிகழ்த்தவும், சைவசித்தாந்த இளைஞர் சங்கவுறுப்பினர்கள் 'சிவாலய சேவை, திருவெண்ணீறு' என்பனபற்றி வினாவிடை நிகழ்த்தவும், தலைவரவர்கள் தக்க நீதிநெறிகளைப் போதிக்கவும் இனிது நிறைவேறியது.

தீர்த்தாண்டதானம்:—சிவாலயத்திருக்குளத்துக்கும் திருமடைப்பள்ளிக் கிணற்றுக்கும், தை க௬௳ உசுவ க்குமேல் கூய நாழிகை அளவில் முகூர்த்தஞ் செய்து, உஉ௳ $3\frac{3}{4}$-க்குமேல் $6\frac{1}{4}$ நாழிகைக்குள் திருக்குளத் திருமதிலுக்கு அஸ்திவாரந்தொடங்கித் திருப்பணி நடைபெற்றுவருகிறது.

வடலூர்:—தை கஎ௳ செவ்வாய்க்கிழமை பூசத்திருநாள் முதல் மூன்றுநாட்கள் தஞ்சை பருவபூசா கைங்கரிய சபையாராலும் பிறராலும் அன்னதானம் முதலியன சிறப்பாகச் செய்யப்பெற்றன.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 APR 1935
MADRAS

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| ஆண்டு எ | பலவான்குடி—ஸ்ரீமுக—மாசி | திங்கள் எ. |

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## தெய்வச் செந்தமிழு நிருத்தமா?

தெய்வவடி வாதலினாற் றெய்வவாய்த் தோன்றலினால்
தெய்வங் கரத்தெழுதிச் சீர்ப்பனுவற்—றெய்வமுறை
செய்து முதல்கொடுத்துச் சீருறலாற் செந்தமிழே
ஐயமறத் தெய்வமொழி யாம்.

உலகின்கண் வழங்கும் மொழிகள் பலவற்றுள்ளும், தெய்வத்தன்மை—தொன்மை—இனிப்பு—வனப்பு—அருட்டிறம்—அற்புதச் செயல்—இலக்கணவரம்பு—இலக்கிய நூற்பெருக்கு—உயிர்க்கு உறுதி பயக்கும் அறமாதிய நான்கு உயர்பொருளுடைமை ஆகியவற்றால் ஒப்புயர்வின்றி விளங்குவது, நமது தாய்மொழி யாகிய தமிழ்மொழியே யென்பது, மொழிநூல் வல்லார் யாவர்க்கும் ஒப்பமுடிந்த முடிபேயாம்.

ஈண்டுத் தெய்வத்தன்மை யாதியாகத் தொகுத்துச்சுட்டியுள்ள ஒன்பான் சிறப்பியல்புகளுள், தெய்வத் தன்மை யுடையது தமிழ் எனவும், அது திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய நன்மொழி யாகலின் செம்மைப் பண்படுத்துச் செந்தமிழ் எனப் பண்டைச் சான்றோர்வழி வழங்கிவருகிறது எனவும், அதனால் அதனைத் திருத்த முயலுதல் சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுடைய மக்கட்கு எட்டுணையும் இயலாதெனவும், மொழித்திறத்தின் முட்டறுத்து முதனூற் பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெற்ற முன்னோர் மொழிபொருளை யன்றி அவர்மொழியும் பொன்னேபோற் போற்றிச் சிலவற்றை யெடுத்துக்காட்டு முகத்தால் இனிது விளக்குவாம்.

ஓசை யொலியெலாமாகி உலகுக் கொருவனாய் ஒளிரும் இறைவன், சொற்கும் பொருட்கும் உயிராய்—மெய்ஞ் ஞானத்தின் தோற்றமாய்த் துலங்குகிறான் என்பது தொன்னூற் றுணிபு. இது வன்றே சத்தப்பிரமம்—மந்திரசரீரி எனத் தனிமுதற்கடவுள் வழங்கப்படுகிறார்.

அருளம்பலத்தில் ஐந்தொழில் நாடகம் ஆடுகின்ற ஆண்டவனது திருவடி திருவயிறு திருத்தோள் திருமுகம் திருமுடி ஆகிய உறுப்புக்கள் முறையே 'நமசிவய' என்னுந் திருவைந்தெழுத்தாய்த் திகழுஞ் சிறப்புடையவாகும் என்பதை,

> "ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
> நாடுந் திருவடியி லேநகரம்—கூடு
> மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
> பகருமுகம் வாமுடியப் பார்."

என்னும் உண்மை விளக்கம் உறுதிப்படுத்தும்.

> 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"
> "முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்"

என்னும் அப்பர் அருட்பனுவல்கள், தமிழுருவாய்த் தனித்தலைமைக் கடவுள் விளங்குகின்றார் என்பதற்குத் தக்க சான்றாகும் இன்னும்,

> "எழுத்தெல்லாம் உடலாகச் சொற்களுறுப் பாக
> எத்துமகப் பொருளுயிராய்ப் புறங்கருவி யிலைமாய்
> வழுத்துகின்ற பாவியலே மாசிலுடை யாக
> வருகின்ற அணியியலே அணியிழைக ளாகப்
> பழுத்தொழுகு கவிச்சுவையே பணிமொழிய தாகப்
> பகருமொரு நாலுவிதப் பயனுயிர்கட் கருளி
> அழுத்தமுறு மின்பநெறி தமிழகத்துத் தழைய
> அரசுபுரி தமிழணங்கை அங்கைமுகிழ்ப் பாமே"

என்னும் தனிப்பாசுரத்தின் உருவக வாயிலாகவும் தமிழிய லுருவாய்த் தெய்வம் விளங்குகின்ற தென்பது தெளிவாம்.

இறைவன் வலக்கையி லேந்திய உடுக்கையி லிருந்து வடமொழி தோன்றிய தன்றே, அவனது திருவாயிலிருந்து முப்பத்து மூன்று செந்தமிழ்ச் சொற்கள் தோன்றின. அவை நிட்பம் நுட்பஞ் செறிந்த நான்கு நூற்பா வடிவாய் இசைநுணுக்கம் என்னும் முத்தமிழ் முதனூலாயிற்று. அதனை இறைவன் ஆசிரிய வடிவாயமர்ந்து அகத்திய முனிவர்க்கு அறிவுறுத்தருள, அதன் வழியே அகத்தியம் தொல்காப்பியம் ஆதிய நூல்கள் தோன்றின என்பர். இவ்வுண்மை,

> "...ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
> ...ந்து மவனை யுணரலு மாமே."

18936



என்னுந் திருமூல நாயனார் திருமந்திரத்தானும்,

> "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
> தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
> குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்."

என்னும் சிவஞானயோகிகள் திருவாக்கானும் செவ்விதிற்றெரிவாம்.

பிறையணி சடைப் பெருமான் மறை முதலிய முதனூல்கள் அருளிய திருவாயால் தன்பெயரொடு புணர்த்த "இறையனா ரகப்பொருள்" என்னும் இலக்கணநூல் வகுத்தருளினார் என்னுஞ்செய்தி,

> "மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
> இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணஞ் செய்யப் பெற்றே
> அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
> டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்."

என்னும் அமுதவாக்கு அறிவுறுத்துகின்றது.

இன்னும், இறைவன் தருமிக்காகக் "கொங்குதேர் வாழ்க்கை ..." என்னுந் திருப்பனுவலையும், பாணபத்திரர் பொருட்டுச் சேரமான்பெருமா ளையனாருக்கு "மதிமலி புரிசை மாடக் கூடல்..." என்னுந் திருமுகப் பாசுரத்தையும், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர்க்கு "அடியார்க் கெளியவன்சிற் றம்பலவன்..." என்னும் திருப்பாடலையும் இயற்றியருளியிருக்கிறார் எனக்காண்கிறோம்.

சுந்தர மூர்த்தி நாயனாருக்கு, "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" எனவும், சேக்கிழார் சுவாமிகட்கு "உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்" எனவும் இறைவர் முதலடி யெடுத்துக் கொடுத்தருளினார் என்பது ஆன்றோர் அநுபவத்திற் கண்ட உண்மையாம். இதனை, பிற்காலத்துக் கம்பர் என்னும் பெயர்பெற்று விளங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தாம் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில்,

> "அடியார் பெருமையும் அருமையும் நாளும் அறியம் பலவாணர்
> அவர்வர லாறு விரித்துரை செய்பவர் யாரென வுட்கருதிக்
> கடியார் மற்றவர் அன்பத் தலையுங் கண்காண் படிசெய்து
> சாமரு முதலு மெடுத்தரு ளினரிக் கடல்சூழ் புவியிடையிப்
> படியார் பெற்றார் தமிழ்மான் மியமெப் பாடைக ளுக்குளதிப்
> பாக்கிய நந்தவ மென்றுபல் லோரும் பகரப் படுபவதீந்
> தடியார் தடிசூழ் குன்றைத் திருமுனி தாலோ தாலேலோ
> சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல் தாலோ தாலேலோ."

என்று இயைபுற இன்புற எடுத்து விளக்கியிருத்தல் நுனித்துணரத் தக்கதாம்.

இறையனா ரகப்பொருளுரை அரங்கேற் றவைக்களத் தலைவர் முருகக்கடவுட் கூறிய உருத்திரசன்ம ரெனவும் அவர் நக்கீரனார் உரை கேட்குங்கால் சொற்றொறுஞ் சொற்றொறும் இன்பக்

கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்து மகிழ்ந்தார் எனவும், திருக்குற ளரங்கேற்றத்திலும் அவ் வுருத்திரசன்மர் திருவள்ளுவருடன் சங்கப் பலகையிடத்து ஒக்க விருந்து கேட்டு உவந்தனர் எனவும் உணரக்கிடக்கின்றன.

கல்லாடர் தாமியற்றிய 'கல்லாடம்' என்னும் நூலை மதுரேசர் சன்னிதியில் அரங்கேற்றியஞான்று, அந் நூற்பனுவல் ஒவ்வொன்றன் பொருளுரைத்து முடிவுற்றுழி தாம் ஒப்பியதற் கறிகுறியாகத் தமது திருமுடி யசைத்து உவப்புற்றனர் என்பதை,

"கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாய்ந்த
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாம்சைத்தார் நூறுதரம்"

என்னும் செய்யுள் தெரிக்கின்றது.

திருக்குறளுக்கு இறையனார் முருகக்கடவுள் கலைமகள் ஆகிய கடவுளர்கள் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் கூறியுள்ளார்கள் எனத் திருவள்ளுவமாலை தெருட்டுகின்றது.

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்."

என்னும் கல்லாடம் ஈண்டு கவனிக்கத்தக்கது.

சிவபெருமான் நக்கீரருடனும், முருகவேள் பொய்யாமொழிப் புலவருடனும் வாதிட்டன ரெனவும், பொல்லாப் பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்குத் திருத் தொண்டத் தொகையின் பொருளருளிச் செய்தனர் எனவும் வழங்கக் காண்கிறோம்.

சிவபெருமான் குமரவேள் இருவரும் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவர்களாய் நூலாராய்ந்தார்கள் என்ப.

'நன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறிநற் கனகக்கிழிதருமிக் கருளினோன் காண்'

எனத் திருநாவுக்கரையரும்,

"தருமொரு தொங்கித் தந்திக் கிளையாய் தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ"

எனக் குமரகுருபரரும் கூறிய கனிவுறு கவிகள் காட்டாகின்றன.

திருத்தில்லை மூதூரிற் சிவபெருமான் அந்தணருருக்கொண்டு எழுந்தருளி மணிவாசகரை யடைந்து அவர் அருளிய திருவாசகமாகிய தமிழ்மறையைத் தமது திருக்கரத்தால் ஏட்டிலெழுதி, "பாவை பாடிய உமது திருவாயால் ஒரு கோவை பாடுக." எனக் கேட்க, அவ்வாறே அவ் வடிகளருளிய திருக்கோவையாரையும் எழுதி, "இங்ஙனம் மாணிக்கவாசகன் சொற்படி அழகிய திருச்



சிற்றம்பல முடையார் எழுதியது." எனக் கைச்சாத்திட்டு, கனக சபையின் பஞ்சாக்கரப்படியில் வைத்து மறைந்தருளினர் என்பர்.

"கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றே அம்பலத்தி
லுடையாருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே."

என்பது இவ் வரலாற்று முறையை விநயமாக விளக்குகின்றது.

இன்னோரன்ன உண்மைவரலாறுகள் பலவற்றால், தெய்வவடிவாய்த் திகழ்தல், தெய்வத்திருவாயிற் றோன்றல், தெய்வத்தால் அருளிச் செய்த நூல்களை யுடைமை, தெய்வத்தா லருளிச்செய்த திருப்பாசுரங்களுடைமை, தெய்வத்தால் முதலடி யெடுத்துக் கொடுக்கப்பெற்றமை, தெய்வங்கள் நூலரங்கேற்றவைக்களத் தலைமை வகித்து நூற்பொருட்டிறனறிந் தொப்பி வியந்தமை, தெய்வங்களருளிய சிறப்புப்பாயிரச் செய்யுட்களுடைமை, தெய்வங்கள் பற்பல சமயங்களிற் பலபுலவர்களுடன் உரையாலும் பாட்டாலும் உவந்து உசாவினமை, தெய்வங்கள் தலைமைப்புலவர்களாய்ச் சங்கமிருந்து நூலாராய்ந்தமை, தெய்வத்தின் திருக்கரத்தால் எழுதப்பெற்றமை ஆகிய செந்தமிழின் தெய்வத்தன்மை தெள்ளிதிற் புலனாகின்றது.

திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த குமரவேள் ஆதிய தெய்வங்கள், அகத்தியர் தொல்காப்பியர் முதலிய முனிவர்கள், நக்கீரர் கபிலர் முதலான பொய்யடிமையில்லாப் புலவர் மணிகள், சம்பந்தர் சடகோபர் முதலான சைவ வைணவ சமயாசாரியர்கள், திருவள்ளுவர் சேக்கிழார் முதலிய தெய்வப்புலவர்கள், கம்பர் ஒட்டக்கூத்தர் முதலான கவிச்சக்கரவர்த்திகள், பட்டினத்தார் தாயுமானார் சிவப்பிரகாசர் குமரகுருபரர் சிவஞானயோகிகள் முதலான சிவானுபூதிச் செல்வர்கள் பலரும்,

"என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்"

என்றபடி காலவெல்லை கடந்த நம் தமிழ்மொழியைப் பசுகரணமொழிந்து பதிகரண முடையராய்ப் பல்லாற்றானும் ஆய்ந்தாய்ந்து வரம்பிட்டுவைத்துள்ள இலக்கண வமைதி, உலகிலுள்ள வேறெம்மொழிக்கும் இல்லையென்பதை,

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."

என்னும் பரஞ்சோதியார் பனுவல் பசுமரத்தாணியென அறுதியிட்டு அறையாநின்றது.

ஓரொருவரால் ஓரொருகாலத்திற் பலவாறு விகாரமடையும் பிறமொழிகளைப் போலாது, நம் தாய்மொழி எத்தகையோராலும்

எள்ளளவுங் கூட்டவோ குறைக்கவோ மாற்றவோ இயலா மாண்புடைத்தாகும்.

தமிழெழுத்துக்களின் எண்ணிக்கையும், பெயர்களும், முறையும், பிறப்பும், வடிவமும், ஒலியளவும், அவ்வெழுத்தாலாம் சொற்களும், அவை புணரும் முறையும், அவை அறிவிக்கும் பொருள்களின் பெற்றியும் பிறவும், எழுவகை மதங்கொடு ஐயிரு குற்றமுமகற்றி அம்மாட்சியொடு எண்ணான்குத்தியி னோத்துப்படலம் என்னும் உறுப்புக்களுடன் தோலா நாவின் மேலோராகிய நல்லிசைப் புலவர்கள் பலரால், தொகை வகை விரியெனும் யாப்புற—போக்கற அமைக்கப்பெற்று விளங்குகின்றன. இத்துணைச் சிறப்பியல் பலவும் எம்மொழிக்கும் இன்மையாலன்றே, தமிழ்மொழி தனக்குத்தானே யிணையாகிய தனிமொழியாம் சதுரப்பாடுடையதாயிற்று. இதற்கு,

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

என்னுந் தனிப்பாசுரம் உவமை விலக்கிச் சான்று கூறுகின்றது.

எழுகடல் நீரையும் உழுந்தளவாக அங்கையிற் கொண்டுண்டு ஏப்பமிட்ட அகத்தியமுனிவரும், தமிழிலக்கண முடிபு காணத்தக்கவோராசிரியனை நாடுவாரானால், சுகிர்ந்து பரந்த சொற்பரவைகளாலாகிய தமிழ்மொழிக்குத் தண்ணிய கடலை உவமிக்க வொண்ணாதென்பதூஉம், அதன் இலக்கண முடிபு இறைவனுக்குப் ஒருகால் அளவிடற் கியலாதாயிற் றென்பதூஉம்,

"கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே."

"ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே."

என்னும் மனோன்மணீய ஆசிரியர் புரபெஸர் சுந்தரம் பிள்ளையவர்கள் கூறிய வாழ்த்துரை சாதுரியமாகச் சாற்றுகின்றது.

"திருந்து தமிழ் இலக்கணவைந் திணைக்கோவை',
"திருந்திய தமிழிற் றெய்வப் புலவர்"

என்பனவாதிய எண்ணிறந்த எடுத்துக்காட்டுகளால், தமிழ்மொழி திருந்திய பண்பு பொருந்திய செம்மொழி யென்பது போதரலின், அது திருத்தப்படத்தக்கதன்று என்பது செவ்விதிற் றுணியப்படும்.

இவ்வாறாக, இக்காலத்திய சில நவநாகரீகர்கள் தமிழ்நெடுங்கணக்கிற் சில எழுத்துக்களைக் குறைக்கவும், வேறு சில எழுத்துக்களை நிறைக்கவும் எண்ணுகிறார்கள். அவ்வாறு எழுத்துக்களின் எண்ணியல் சிதைவுறின், அதுகாரணமா யியலும் மற்றைய இயல்களின் கதி யென்னாவது? திருத்தம் வேண்டுவோர் செப்புவன:—



1. சில எழுத்துக்கள் சொற்குறுப்பாகாமை. 2. அவற்றால் அச்சுக்கோப்பவர்கட்குக் கஷ்டம் 3. பிற மொழிகளி லுள்ள சில ஒலிகட்கு ஏற்றவாறு புதிய எழுத்துக்களைப் புகுத்தல் என்பனவாம்.

ஙகரமெய் அகரத்துடனன்றி மற்றைய வுயிர்களுடன் கூடிச் சொற்குறுப்பாதலில்லை. ஆதலால், ஙா முதலிய அவ்வருக்கத்துள்ள பன்னொன்றும் பயனில. "ஙப்போல் வளை" என்ற ஔவையார் அருள்வாக்கு இதற்கு அநுகூலம் என்பர். அவ்வம்மையார் 'ஙப்போல் வளை' என்றாரே யன்றி, ஒழி என்ன வில்லையே. அவற்றை யொழிக்கின் உயிர்மெய்ப் பிறப்பியல் மாறும். அது காரணமாக மற்றைய இயலெல்லாம் மாறுகொளலாகும். அது கிடக்க:

"சிங்ஙுவை (நாக்கு); அங்ஙே (சிறிது), ஙா (மீன்), ஙீமா (தங்கை), ஙோய் (ரூபா); ஙுவெனு—ஙுவெசீன்—ஙுவெமா (மக்கட்பெயர்கள்), அங்ஙுவே, அங்ஙூன், அங்ஙோன் (மக்கட்பெயர்கள்) இன்னோரன்ன ஆரியம், பர்மியம், சீனம் முதலான பிறமொழிகளை யெடுத்தாளுதற்கண், அவ் ஙா முதலிய பிறவும் உறுப்பா யமைதலின், அவற்றை யொழித்த லொல்லுமோ?

2. அச்சுக்கோப்பவர்கட்குத் தமிழெழுத்துக்கள் இருநூற்றுக்குமே லிருப்பதும் மிகவும் கஷ்டமாகும். ஆங்கிலம் போல் இருபத்தாறில் அடக்கிவிட்டால் இலகுவாகும். ஆதலின், தமிழெழுத்துக்களை இருபஃதுக்குள் அடக்க முயறலே ஏற்புடைத்தாமென்னுவோ! அச்சாளர் அவ்வெழுத்துக்களை வாங்காது, அவற்றிற்கு அறைவகுக்காது ஒழியட்டுமே. இற்றென வரையறுத்து எண்ணருங் காலமுதல் இஞ்ஞான்றுவரை ஏட்டில் எழுத்தாணிகொண்டு கைநோவ எழுதிவந்த மகான்களெல்லாம், சொற்குறுப்பாகாமை கண்டு அவ்வெழுத்துக்களை யொழியாராகவும், இயந்திர சாதனங்கொண்ட இக்காலத்தார் அவற்றை யொழிக்கக் கருதுதல், ஏழைமநிலையையும் கோழைத் தனத்தையும் குறிப்பதன்றி வேறென்னும்? சொற்குறுப்பாகாமை கண்ட இன்னாரது நெடிய யூகம் இறையனார், குமரவேள், அகத்தியர், தொல்காப்பியர் ஆதிய கடவுளர்க்கும் முனிவர்க்கும் தோன்ற வில்லைபோலும்.

அச்சுத்தொழிற்கு அவதி யென்பதையொருபுடையொதுக்கி, 'ழகரம்—ளகரம்—லகரம்' என ஓரினத்தில் மூவகையும், 'ரகரம்—றகரம்' என இருவகையும், 'ணகரம்—நகரம்—னகரம்' எனமூவகையும் ஆதிய பல வொலிவேறுபாடுகளுடைமையால், படிப்பவர்கட்கே மிகவும் மயங்க வேண்டியதாகின்றது. ஆதலின், அவையெல்லாம் ஓரியல் ஒலியுடையவாய் வழங்கவைத்தல் நலமாமன்றே? ஆகவே, வாழ்—வாள்என்பன வால் எனவும், அறம்—அரம், கறி—கரி எனவும், மண்—மன், கண்ணி—கன்னி எனவும் வழங்கப்பட்டுப் பொருள் புலப்படற் கியலாப் புழுதிமயமாகுமே. அந்தோ!

இவைதானா திருத்தம்? இன்னும் தமிழில் ஒரு பொருட்குப் பல சொற்களும், ஒரு சொற்குப் பல பொருள்களும் இருப்பதனால், அநேகர் சொற்பொருட்டிறன் எளிதிலுணரா திடர்ப்படுகின்றனர். அதுகொண்டு அச் சொற்பொருள்களை யெல்லாம் ஒன்றுபடுத்த வொருப்படலாமோ?

3. வேற்றுமொழிகளிற் சிலவற்றின் ஒலி தமிழில் இல்லையாதலின், அவற்றுக்கிசைந்த எழுத்துக்களைச் சேர்த்தலென்பது முடிவுபெறாமை என்னும் குற்றத்துக்கிடனாம். உலகில் ஒவ்வொரு மொழிக்கும் ஒலி வேறுபாடுகள் பலப்பலவாம். ஒன்றன் ஒலி ஒன்றுக்கியலா. உதாரணமாக:— நமது தமிழ்மொழியுடன் தொன்றுதொட்டுஇணைந்து வழங்குவது வடமொழியாகும். தமிழெழுத்துக்கள் சிலவற்றின் ஒலி வடமொழிக்கண் இல்லை. அதனால், வடமொழியாளர் தமிழொலியை யேற்று அவற்றுக்குரிய எழுத்துக்களைத் தமது நெடுங்கணக்கிற் சேர்த்துக் கொள்வார்களா? தமிழ் என்னுந் தன் பெயரிலேயே ழகரமாகிய பெரும்பேறு தனக்கே யுரிமையுடையதென்பதை விளக்கிக் கொண்டிருக்கக் காண்கிறோம். *ழகரவொலி வேறெம்மொழியினு மில்லை யென்பர். அதனால், உலகினுள்ள மற்றைய மொழியினரெல்லாம் ழகரத்தைத் தமது நெடுங்கணக்கினுட் கூட்டிக்கொள்வர்கொலோ?

ஆன்றமைந்த செந்தமிழ் அறிஞர்களே! அன்பர்களே!

இதுகாறும் விரித்து விளக்கியவாற்றால், தெய்வத் தன்மையும் திருந்திய பண்பும் பொருந்திய நமது தாய்மொழியும் தனிமொழியும் ஆகிய தமிழ்மொழி, எவரானும் எட்டுணையும் எவ்வகையினும் விகாரப்படும் இயல்புடைத்தன்று என்பது இனிது புலப்படுவதாயிற்று. இவ்வாறிருக்க, தமிழன்பர் மகாநாட்டினர் செந்தமிழைத் திருத்த முனைந்தது, இறைவனாற் படைக்கப்பட்டு, நிலம் நீர் நெருப்பு வளி வான் ஞாயிறு திங்கள் நால்வகைத் தோற்றத் துயிர்வகைகளாக விளங்குகின்ற இவ்வுலகத்தைத் திருத்தியமைக்க முயலுதலோ டொக்குமன்றோ? தமிழ்மொழியை வளர்ப்பான் தலையிட்ட அம்மகாநாட்டினர், தமிழ்மரபைக் குலைப்பான் குறிக்கொண்டது அறக்கொடுஞ் செயலேயாம் ஆதலால், இத்தகு மொழி மரபு வழுவும் மாறுபட்ட பணியிலீடுபடாது, தமிழ்தழைக்க—தமிழ் நாடு செழிக்கத்தக்க நற்றுறைகளி லிறங்கி நம்மக்கட்கு நன்மைபுரிய நாடுவார்களாக! என ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய மாதொருபாகனார் திருவருளை வழுத்துகின்றோம்.

---

* இதுபற்றிய சரிதை யொன்று இதில் இடம்பெறாமையால் அடுத்த முறை வெளிவரும்.

உ

# தமிழன்பர் மகாநாடு.

(23—12—1933)

[மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் செய்த வரவேற்புப் பிரசங்கம்]

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது
தன்னே ரிலாத தமிழ்."

அக்கிராசனாதிபதி யவர்களே! தமிழ் அன்பர்களே!

தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்து இங்கே வந்து கூடியிருக்கும் உங்களுக்கு நல்வரவு கூறுகின்றேன். நீங்கள் இங்கே வந்து ஒருங்கே கூடியிருத்தற்கு உங்கள் உண்மையான தமிழபிமானந்தான் காரணமென்பதை அறிந்து பாராட்டுகின்றேன். தமிழ் அன்பர்கள் பெரும்பாலோரை ஒருங்கே கண்டு வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததைக் குறித்து மிகவும் மகிழ்கின்றேன். தமிழ் வளர்ச்சியிலும் தமிழ்நாட்டினருடைய மனஒற்றுமையிலும் கவனத்தைச் செலுத்தும் கருத்தைக்கொண்ட உங்களுடைய நல்லுதவி இந்த மகாநாட்டைச் சிறப்புற நடைபெறச் செய்யுமென்று நம்புகிறேன்.

தமிழ் மொழியானது வளர்ச்சி அடைவதற்கும் தமிழ் நாட்டினருக்குத் தமிழன்பும் தமிழ்ப்பயிற்சியும் அதிகமாக உண்டாவதற்கும் உரிய வழிகளை ஆராய்வதற்காக நாம் இப்பொழுது கூடியிருக்கிறோம். பலவேறு துறைகளில் சிறந்த அறிவுவாய்ந்த கலைஞர்கள் பல அரிய யோசனைகளைச் சொல்லக்கூடுமாதலின் உங்களுடைய அரியகாலத்தை நான் வீணாக்குவது உசிதமன்று; ஆயினும், எனக்குத் தோற்றிய சில கருத்துக்களை இங்கே சொல்லுவது மிகையாகாதென்று எண்ணுகிறேன்.

தமிழ் மொழியானது பல ஆயிர வருஷங்களாகப் பல உபகாரிகளால் பலவகையாக வளர்ச்சியை அடைந்து வந்திருக்கிறது. அப்போதிருந்த புலவர்கள் இயற்றிய நூல்களும் உரை முதலியனவும் தமிழ் மக்களின் நாகரிக வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்திருக்கின்றன. அவற்றின் இயல்பு முழுவதையும் நாம் அறியமுடியவில்லை. அவற்றிற் பல இந்தக்காலத்தில் விளங்காதனவாக இருக்கலாம். ஆயினும், அவற்றை அக்காலத்திருந்த மக்கள் சிறந்தனவாகக்கொண்டு படித்துப் பயனடைந்து வந்திருக்கிறார்களென்பதை நாம் மறக்கக்கூடாது.

பழைய நூல்கள் உரைகள் முதலியவற்றை நாம் நன்றாகப் பயின்று அறிந்து கொள்ளவேண்டும்; அவற்றைத் தமிழ்நாட்டினர் யாவரும் நன்றாக அறிந்து பயனடையும்படி செய்யவும் வேண்டும். பாடஞ் சொல்லுதலே அதற்கு உரிய சிறந்த முறையாகும். தமக்கு விளங்கும் சில பாடல்களும் நூல்களுமே சிறந்தனவென்றும் தமக்கு விளங்காதனவாயின் அவை குறைபாடுடையனவென்றும் சிலர் எண்ணிக்கொண்டு பழைய நூல்களையும் அவற்றைப் படித்தவர்களையும் புறக்கணிக்கின்றனர். அச்செயல் ஆதரிக்கத் தக்கதன்று.

சில ஆசிரியர்களுடைய நூல்களிலும் உரைகளிலும் உள்ள கருத்துக்கள் நமக்கு உடன்பாடில்லையானால் அவற்றை அலட்சியம் செய்யாமல் அவர்கள் அங்ஙனம் கூறியதற்குரிய காரணங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து அறியவேண்டும். கால இயல்பு மாறமாற ஒரு பாஷையின் நூலமைப்புக்களும் மாறிவருவது இயல்பு. முற்காலத்தில் உள்ள சில வழக்கங்களும், சில நூல்களிற் கூறப்பட்ட செய்திகளும் இக்காலத்திற்கு ஒவ்வாதனவாக இருக்கலாம். அதனால் அவை தவறெனத் துணிந்துவிடலாகாது.

தமிழ்மொழியில் புஸ்தகங்களில் வழங்கும் பாஷை ஒரு விதமாகவும் பேசும் பாஷை ஒருவிதமாகவும் இருக்கின்றன. பேசும் பாஷையிற் காணப்படும் கொச்சை வார்த்தைகளை அப்படியே நூல்களில் அமைத்துக் கொள்வதும், நூல்களில் வழங்கும் பாஷையிலேயே பேச முயல்வதும் அநுபவத்தில் நடைபெறக்கூடியன அல்ல. தமிழ்நாட்டின் பல பாகங்களில் ஒரே வகையாகத் தமிழ் வார்த்தைகள் வழங்கவில்லை. ஒவ்வொரு வகுப்பார் பேசுவதிலும் வேற்றுமைகள் இருக்கின்றன. சாதி, சமயம், தொழில், தேசம் என்பவற்றிற்கு ஏற்பச் சில சில வேறுபாடுகள் பேசும் பாஷையில் அமைந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் எழுதும் பாஷையிற் புகுத்துவதும், அவற்றைக் கொண்டு நூல் இயற்றுவதும் நினைத்த பயனை அளிக்கத்தக்கன அல்ல. ஒரு வகையினர் மற்றொரு வகையினருடைய வார்த்தைகள் சிலவற்றை வழங்குவதில்லை. சில இடங்களில் நல்ல பொருளைக் கொடுக்கும் சிலசொற்கள் வேறு சில இடங்களில் கெட்டபொருளையே கொடுத்தலைப் பார்க்கிறோம்.

ஆகவே, தமிழ் வசனநடையை ஒருவகைப்படுத்த விரும்பும் அன்பர்கள், 'எழுதும் பாஷை வேறாக இருக்கிறதே' என்று எண்ணுவதிற் பயனில்லை. பிழையின்றி இயன்றவரையில் யாவருக்கும் விளங்கும் சொற்களையே எழுதும் பழக்கத்தை மேற்கொள்வதே நல்ல முறையாகும். வழக்கற்ற சொற்களையும் திரிசொற்களையும் வசனநடையில் கூடியவரையில் விலக்குதல் நன்று. தமிழ்நாட்டினர் தம்கருத்தை எளிதில் அறிந்துகொள்ளவேண்டுமென்பதை எழுதுபவர்கள் மனத்திற்கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும். பேசினாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ள வேண்டுமேயன்றி, கடினநடையைக் கைக்கொள்ளுதல் கூடாது; கொண்டால், 'தமிழே கடினமானது' என்ற எண்ணம் தமிழ்மக்களுக்கு உண்டாகிவிடும்.

பழைய காலத்தில் நூல்களைப் பாடஞ்சொல்லிய ஆசிரியர்கள் மிகவும் எளியநடையிலேயே கருத்தை விளக்கிவந்தார்கள். பரம்பரையாகப் பாடங்கேட்கும் வழக்கமே அதிகமாக இருந்தமையால் அக்காலத்தில் தமிழ்வசன நூல்கள் இயற்றப்படவில்லை.

பலவருஷங்களுக்கு முன்பு இச்சென்னை நகரத்தில் துரைத்தனத்தார் 'கல்விச்சங்கம்' என ஒன்றை அமைத்துப் பல இடங்களிலிருந்து தமிழ் வித்துவான்களை வருவித்து அவர்களைக்கொண்டு தமிழ்வசன நூல்களை எழுதச்செய்தனர்; வேறுபாஷைகளிலுள்ள நூல்கள் சிலவற்றையும் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தனர். இத்தகைய முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருந்தால் தமிழ்மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாகியிருக்கும்.



பிற்காலத்தில் அச்சியந்திரம் இந்நாட்டுக்கு வந்தபிறகு தமிழில் நல்ல வசன நூல்களை முதலில் எழுதி வெளியிட்டு உபகரித்தவர்களுள் ஆறுமுக நாவலர் சிறந்தவர். அவர் எழுதிய பாடபுத்தகங்கள் நல்லொழுக்கத்தையும் தெய்வ பக்தியையும் படிப்பவர்களுக்கு உண்டாக்கும். 'நாவல்' எனப்படும் நவீனத்தை முதலில் எழுதியவர் மாயூரம் வேதநாயகம்பிள்ளையாவர். அவருடைய வசனநடை எளியதாகவும் சுவையுடையதாகவும் இருக்கிறது.

சென்ற முப்பதுவருஷங்களில் கணக்கற்ற வசன புத்தகங்கள் தமிழில் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் திருத்தமான நடையை உடையவை சிலவே. மாணவர்களுக்காக எழுதப்படும் புத்தகங்கள் இக்காலத்தில் மிக அதிகமாக வெளிவருகின்றன. வகுப்பின் தரத்திற்கும் படிக்கும் கால அளவுக்கும் ஏற்றவண்ணம் திருத்தமாக அவை அமைந்தால் நன்றாக இருக்கும்.

சிலர் தாம் மேற்கொள்ளும் புதியமுறைகளை யாவரும் கைக்கொள்ள வேண்டுமென்று இக்காலத்தில் தூண்டுகின்றனர். பலருக்குப் பொதுவான பாஷையில் தங்கள் மனம் போனவாறு தம்கொள்கைகளை அவசரப்பட்டுப் புகுத்திவிடுதல் சரியன்று.

இக் காலத்தில் விருத்தியாகி வரும் சாஸ்திர அறிவு தமிழ் மக்களிடத்தும் நன்றாகப் பரவவேண்டுவது இன்றியமையாத தாதலின், அத்துறையிலுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் அவசியமேயாகும். ஆனால், அவ்வகை மொழிபெயர்ப்புக்கள் ஒரே முறையாக இருக்க வேண்டும். சாஸ்திர சம்பந்தமாகவும் பொருளின் பெயர்களாகவுமுள்ள மற்றப் பாஷைச் சொற்களும் வேறு சிலவகைச் சொற்களும் இப்பொழுது சாதாரணமாகத் தமிழில் வழங்குகின்றன. அவற்றை மாற்றிப் புதிய சொற்களை உபயோகிக்கத் தொடங்கினால் அச்சொற்கள் தமிழ்நாடு முழுவதும் வழக்கத்தில் அமைவதற்கு நெடுங்காலம் ஆகும். சொற்களின் வழக்கமும் அவற்றின் பொருள் எளிதில் விளங்குதலும் முக்கியமேயன்றி எல்லாம் தனித்தமிழ்ச் சொற்களாகவே இருக்க வேண்டுமென்பது அநுபவத்தில் இயலுவதன்று. பழைய இலக்கியங்களிற்கூடச் சில இடங்களில் வேறு பாஷைச் சொற்களை அவ்வந் நூலாசிரியர் அமைத்திருக்கின்றனர். தமிழில் எவ்வளவோ அரியசொற்கள் இருப்பினும் கருதிய பொருளை அவ்விடத்தில் நன்றாக விளக்குவதில் அச்சொற்களைப்போல மற்றவை அமையாவென்று அப்புலவர்கள் எண்ணியிருக்கலாம்.

மொழிபெயர்க்கும்பொழுது பண்டைத் தமிழிலக்கியங்களில் கலைகளுக் குரியனவாக உள்ள சொற்களை இயன்றவரையில் உபயோகித்துக் கொள்ளலாம். பிற பாஷைச் சொற்களை எடுத்தாளும்பொழுது தமிழுக்கு ஏற்றபடி அவற்றின் உருவத்தை மாற்றிக்கொள்ளலாம். ஈரங்கி, உயில், பாதிரி, வங்கி, காபி முதலிய வார்த்தைகள் இங்ஙனமே அமைக்கப்பட்டனவாகும். சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களும், தனவைசியர்களும், யாழ்ப்பாணத்தார்களும் இவ்வகையில் கொண்டிருக்கும் முறைகள் சிலவற்றை நாம் கைக்கொள்ளலாம். ஒரு பாஷையிலுள்ள உச்சரிப்பு வேறொரு பாஷையில் வழங்கும்போது அதற்கேற்ப மாறினால்தான் பொருத்தமாக இருக்கும். பழைய இலக்கியங்களில் வடசொற்களை எடுத்தாளுகையில் புலவர்கள் அவற்றைத் தமிழுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பண்டைக்காலப்புலவர்கள் வடமொழிப் புலவர்களோடு மனங்கலந்து பழகி அவர்களுடைய கருத்துக்களையும் சொற்களையும் தங்கள் நூல்களில் ஆண்டிருக்கிறார்கள். வடமொழியின் தொடர்பினால் தமிழ்மக்கள் எவ்வளவோ அரிய கருத்துக்களை அறிந்து பயனுற்றிருக்கிறார்கள். ஒரு பாஷை வேறுபாஷையின் தொடர்பினால் விரிவுறும். அதனால் அப்பாஷையின் அழகு ஒருபோதும் குறையாது.

சர்வகலாசங்கத்தார் பல வருஷங்களுக்கு முன்பு சில அறிஞர்களைக் கொண்டு ஆராய்ச்சிசெய்து தமிழ் வசன நடையில் இன்ன இன்ன சொற்களை வழங்கலாமென ஒரு முடிவைச் செய்தார்கள். அம் முடிவிற் கண்டவற்றுள் கொள்ளத்தக்க உபயோகமான சொற்களை நாம் எடுத்து ஆளலாம்.

தமிழ்மக்கள் தங்கள் தங்கள் ஜீவனத்துக்குரிய பலவகை முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் யாவரும் சிறந்த இலக்கியங்களைப் படித்து இன்புறுதலென்பது இயலாத காரியம். புதிய செய்திகளோ கொள்கைகளோ இக்காலத்திற் பத்திரிகைகளின் மூலமாகவே பரவிவருகின்றன. பத்திரிகைகளைப் படிக்கும் வழக்கம் இப்போது அதிகரித்து வருகின்றது. ஆதலின், தமிழ்ப் பத்திரிகையை நடத்துகிறவர்கள் தங்களுடைய கடமையை நன்றாக உணர்ந்து தேசக்ஷேமத்தையும் பாஷையின் நன்மையையும் கருதித் தமிழ்ப்பயிற்சியுள்ளவர்களை உடன் வைத்துக்கொண்டு உழைத்து வருதல் தமிழகத்துக்குப் பரமோபகாரமாக இருக்கும். எந்தப் பொருளும் அதற்குரிய லக்ஷணங்களுடன் அமைந்திருந்தால்தான் அதனை நாம் மதிக்கிறோம்; இல்லையாயின் வெறுக்கிறோம். பாஷை விஷயத்தில் மட்டும் அந்தக் கொள்கைக்கு விலக்கு உண்டென்பது முறையாகாது.

சிலவருஷங்களுக்கு முன்வரையில் தமிழின் நிலைமை மிகச் சிறந்ததாகவே இருந்தது. அரசாட்சி மாறுபாடுகளிலும் கால வேறுபாடுகளிலும் தமிழ்ப்பாஷைக்குக் குறைபாடு நேரவேயில்லை. மகம்மதியர் முதலியவர்களுடைய அரசாட்சியிற்கூடத் தமிழ்மொழிக் குரிய சிறப்பானது குறையவேயில்லை. பிற்காலத்திலும் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய இடங்களிலுள்ள மடங்களும், ஸேதுஸமஸ்தானம் முதலிய ஸமஸ்தானங்களும் தமிழ் வித்துவான்களை ஆதரித்துத் தமிழ் வளர்ச்சிக்குரிய காரியங்களைச் செய்து வந்திருக்கின்றன. இந்த ஆங்கில அரசாட்சியில் துரைத்தனத்தாரும் சர்வகலாசாலையாரும் பாஷையின் அபிவிருத்திக்குரிய உதவிகள் பலவற்றைச் செய்துவந்தும், நம்மவர்களை பலவகையான தக்க உத்தியோகங்களை வகித்து நாட்டின் நலத்துக்கு உரிய காரியங்களைச் செய்யும் நிலையில் இருந்தும், நூல்கள் பரவுவதற்குரிய அச்சுமுதலிய சாதனங்கள் மலிந்திருந்தும், தமிழ்நூற்பயிற்சி இப்போது மாறுபட்டிருப்பதுபோல வேறு எக்காலத்திலும் இருந்ததில்லை. இந்த நிலையைப் போக்குவதற்குரிய வழிகளைப்பற்றி இங்கே உள்ள அறிஞர்கள் ஆராய்ந்து, செய்கையில் நடைபெறக் கூடியவற்றை மேற்கொண்டால் நலமாயிருக்கும்.

தமிழ்நாட்டார் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் தமிழ்ப் பாஷையையே உபயோகிக்கவேண்டும். ஆங்கிலம் அறிந்தவர்களிற் பெரும்பாலோர் ஆங்கிலத்திலே நினைக்கிறார்கள்; அவர்களால் ஆங்கிலச் சொற்கள் கலவாமற் பேசமுடியவில்லை. இத்தகைய நிலை ஒரு பெருங் குறையல்லவா?



ஆங்கிலம் படித்தவர்களிற் பெரும்பாலோர் கடிதங்களைத் தமிழில் எழுதும் பழக்கத்தை அடியோடே விட்டுவிட்டார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் மிக அழகாகவும் மற்றவர்கள் வியக்கும்படியாகவும் பேசியும் எழுதியும் வருகிறார்கள். அம்முயற்சிகளையே தாய்மொழியிலும் கொள்ளுதல் முதற் கடமையன்றோ? ஜி. யூ. போப் முதலிய வேறுநாட்டினர்கள்கூடத் தமிழின் இனிமையை உணர்ந்து அதிலுள்ள பழைய நூல்களை மிக உழைத்துப் படித்து அறிந்து மகிழ்ந்திருக்கிறார்கள்; தமிழ்ப்பயிற்சி உள்ளவர்களுக்கு அவர்கள் ஊக்கமளித்தும் வந்திருக்கிறார்கள். தமிழர்களாகிய நாம் அத்தகைய முயற்சிகளைச் செய்யவேண்டிய அளவு செய்யாமல் இருக்கிறோம். ஆங்கிலம் அறிந்த தமிழர்கள் தமிழிற் பேசப் பழகிவிட்டால் தங்களுடைய கருத்தை நன்றாக வெளியிட முடிகிறதென்றும் ஊக்கம் உண்டாகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆதலின், அச்செயலை யாவரும் விடாமல் மேற்கொள்ளுதல் நலம்.

தமிழ் நூல்களைத் தக்க அறிஞர்களைக்கொண்டு வெளியிட முயற்சி செய்யவேண்டும். ஒருவர் மேற்கொண்ட முயற்சியையே பலர் மேற்கொண்டு உழைப்பதைக் காட்டிலும் பலவகை முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்தால் தமிழ் பலதுறையிலும் விருத்தியடையும். ஒருவர் உழைப்பினாற் செய்த ஒன்றையே பலவேறுவகையிற் கைக்கொண்டு பல உருவத்தில் தம்முடைய உழைப்பின் பயனாக வெளியிடுதல் முறையாகாது. தமிழ் அறிஞர்கள் தங்களுடைய ஆற்றலைத் தனித்தனியே காட்டும் முயற்சிகளைச் செய்யவேண்டும்.

பண்டைக்காலத்துத் திண்ணைப் பள்ளிக் கூடங்களில் தமிழ்க்கணித வகைகளையும் நிகண்டுகளையும் இன்றியமையாத இலக்கிய இலக்கணங்களையும் கற்பித்து வந்தனர். பழைய முறைப்படி பாடங்கேட்டவர்களுக்கு அவை உபயோகமுள்ள நூல்களாக இருந்தன. சங்கநூல்கள் வரையில் அவர்கள் தங்கள் பயிற்சியை முறையாகவே வளர்த்து வந்தனர். அந்த முறை இப்பொழுது அடியோடு போய்விட்டது. அதனால்தான் பாஷையில் அபிமானமும் குறைவுபட்டது.

முறையாகப் பாடஞ் சொல்லுதலும் பாடங் கேட்டலும் மலிந்திருந்த காலத்திலேதான், கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய பெரும்புலவர் இருந்தனர் என்பதை நாம் எண்ணவேண்டும். அவர்களைப் போன்றவர்களை இக்காலத்திற் பார்க்கவே முடியாது. இப்பொழுது பாஷை உள்ள நிலையில் இனியும் பார்த்தல் அரிதெனத் தோற்றுகிறது. நூல்முற்றும் படித்து அறிவதற்குள் ஆராய்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும் சொல்லத் தொடங்கும் இயல்பு இக்காலத்தில் வளர்ந்து வருகிறது. தாம் படித்ததே போதுமென்ற திருப்தியும் பலருக்கு உண்டாகின்றது. சில நூல்களைப் படித்த பயிற்சியினால் விரிந்துள்ள தமிழ்ப் பாஷையிலேயே திருத்தம் செய்ய அவர்கள் முற்பட்டு விடுகிறார்கள்.

பாடஞ்சொல்லுதலின் அவசியத்தை நன்றாகத் தமிழ் நாட்டார் உணரவேண்டும். பாடங் கேட்பதால் அறிந்துகொள்ளும் பல அரிய இரகசியங்களை எவ்வளவு சிறந்த அறிவுடையவராக இருப்பினும் தாமாகவே படித்து அறிந்துகொள்ள இயலாது. முறையாகப் பாடங்கேட்டவர்களுக்கும் தாமே படித்தவர்களுக்கும் எந்தக் காலத்திலும் வித்தியாசம் இருப்பதைக் காணலாம்.

எந்தத் துறையில் நாம் ஒரு முயற்சியைச் செய்யத் தொடங்கினாலும் அந்தத் துறையில் வல்ல அறிஞர்கள் சிலரையேனும் வைத்துக்கொண்டு அதனைச் செய்விக்கவேண்டும். எல்லோரும் எல்லாவற்றையும் செய்வதென்பது அநுபவ சாத்தியமானதன்று.

சங்ககாலத்திலும் பிற்காலங்களிலும் பலவகையில் வேறுபாடுடைய புலவர்கள் தமிழ் வளர்ச்சிக்குரிய முயற்சியில் தங்கள் வேற்றுமைகளை மறந்து மனம் ஒன்றி உழைத்தார்கள். சைவர்களும், வைஷ்ணவர்களும், ஜைனர்களும், பௌத்தர்களும், பிறரும் ஒருங்கிருந்து தமிழாராய்ந்திருக்கின்றனர். இதுவரையில் வேறு விஷயங்களில் இருந்தபேதங்கள் மொழி வளர்ச்சிக்குத் தடைசெய்ததில்லை. இந்தக்காலத்திலோ யாதொரு நலனுமின்றித் தேசம், சாதி, சமயம் முதலியவற்றிலுள்ள கொள்கை வேறுபாட்டைப் பாஷைசம்பந்தமான முயற்சியிலும் சிலர் புகுத்திவருவது மிகவும் வருந்துதற்குரியது. மன ஒற்றுமை நீங்கினால் எந்தக்காரியமும் செய்ய இயலாதாதலின் பலதிறப்பட்ட அறிஞர்களும் ஒன்று கூடி ஒற்றுமையாகப் பழகித் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

நமக்குப் பல தமிழ் நூல்களை இயற்றியளித்த புலவர்களையும் அவர்களுடைய அருஞ்செயல்களையும் நாம் மறவாமல் அத்தகைய புலவர்களுடைய நாட்களைக் கொண்டாடி வரவேண்டும்.

மதுரையில் ஸேதுபதி வேந்தரவர்களைத் தலைவர்களாகக்கொண்டு விளங்கும் தமிழ்ச் சங்கமும், சென்னைச் சர்வகலாசாலையும், அண்ணாமலைச் சர்வகலாசாலையும், தனவைசியர்களுடைய சில நகரங்கள் முதலியவற்றிலுள்ள கலாசாலைகளும், இத்தமிழ் நாட்டிலும் இலங்கையிலுமுள்ள வேறு சில சங்கங்களும் தமிழ்வளர்ச்சியைக் குறித்துப் பல தொண்டுகளைச் செய்து வருகின்றன. தமிழறிஞர்களிற் சிலர் தமிழ் நூல்களைப் பாடஞ்சொல்லும் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றனர். இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் தலைவர்களாக வுள்ளவர்கள் தமிழறிவின் வளர்ச்சியைக் கருதி நிலையான தருமங்களைச் செய்து வருதல் யாவரும் பாராட்டுதற்குரியது.

தமிழ் வளர்ச்சியின் திறத்தில் மேற்கொள்ளக்கூடிய துறைகள் இன்னும் பல இருக்கின்றன. செல்வர்களும் அறிஞர்களும் மற்றவர்களும் தங்கள் தங்கள் ஆற்றலைக்கொண்டு செய்யத்தக்க காரியங்களைச் செய்தால் தமிழ்நாட்டிற்குப் பேருதவியாக இருக்கும்.

இதுகாறும் நான் தெரிவித்தவற்றுள் உசிதமாகத் தோற்றுவனவற்றை ஏற்றுக்கொள்ளும்படி உங்களை வேண்டுகிறேன்.

இங்கே வந்துள்ள தமிழன்பர்கள் தங்கள் தங்கள் அநுபவத்தினால் அறிந்த முறைகளை வெளியிட்டுத் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரிய செயல்களை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழன்பர் மகாநாடு கூடியதன் நோக்கம் நன்கு நிறைவேற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

உ

# சிவபேதங்களும் பதிபேதங்களும்.

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்களவர்கள்.)

சிவம் ஆநந்தமாய்விளங்கும்சொரூபநிலையுள்ளபொருளாகும். இந்தச்சிவம் எல்லையொன்றில்லா வியாபகமாயிருக்கும். அக்கினியிற் சூடுபோலவும், சூரியகிரணம் போலவும் இதனிடத்து விளங்கும் அருட்குணம் சத்தி யெனப்படும். அந்தச் சத்தி பராசத்தியாம். மகாமாயை யென்னுஞ் சுத்தமாயை இந்தச்சிவவெளிப்பரப்பின் ஏகதேசத்தில் அடங்கிக்காரணரூபமாயிருக்கும்.

சிவத்தைநோக்க ஏகதேசமான அந்த மகாமாயையைக் காரியப்படுத்துஞ் சத்தி ஆதிசத்தி யெனப்படும். அது பராசத்தியின் ஏகதேசபாகமாம். அச்சத்தியோடு கூடிய சிவத்தின் ஏகதேச நிலை பதியெனப்படும். சிவத்தின் ஏகதேசநிலையாகிய பதியின் சந்நிதானத்தில் மகாமாயை காரியப்படும். அதனைக் காரியப்படுத்துவது பதியின் சத்தியாகிய ஆதிசத்தியாம். ஆதிசத்தியால் அம்மாயை தொழிற்பட அதன்காரியங்கள் தோன்றி நின்று ஒடுங்கும். அவ்வாறு காரியப்படும்பொழுது சிவதத்துவம் சத்தி தத்துவம் சாதாக்கிய தத்துவம் என்னும் சுத்தமாயா தத்துவங்களில் அப்பதி தமது சத்தியினால் இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்று அவத்தை யுடையவராய், அருவமும் அருவுருவமும் உருவமுமான சிவன் சதாசிவன் மகேசுரன் என்னும் மூன்று திருமேனிகளை அடைகின்றார். இந்த மூன்றும் பதி தமது சத்தியினாற் கொள்ளும் வடிவங்களாம்.

சிவம் சத்தி சாதாக்கியம் என்னுந் தத்துவங்கள் தோன்றிய பின்னர்த் தோன்றிய ஈசுவரதத்துவத்தில் அநந்தர் இருப்பர். இவர் விஞ்ஞானகலரில் மலம்நீங்கி வித்தியேசுவர நிலைபெற்றவர். பதியினுடைய சத்தி இவரிடத்தே தங்கி இவரை அதிட்டிக்கும். அச்சத்தியினா லதிட்டிக்கப் பெற்ற அநந்தேசுரர் அசுத்தமாயையைத் தொழிற்படுத்தி அசுத்தமாயா தத்துவங்களை உண்டாக்குவர். அன்றி அவ்வநந்தேசுரர் பிரளயாகலரில் மலநீங்கி உருத்திரபதம்பெற்ற ஸ்ரீகண்ட ருத்ரரை அதிட்டித்துப் பிரகிருதி மாயையைத் தொழிற்படுத்திப் பிரகிருதி காரியமான தத்துவங்களை யுண்டாக்குவர்.

ஸ்ரீகண்டருத்திரர் பிரமாவை அதிட்டித்து நின்று படைத்தும், விஷ்ணுவை அதிட்டித்து நின்று காத்தும், காலருத்திரரை அதிட்டித்து நின்று அழித்தும் இவ்வாறு தொழில் செய்வர். இவருள், பிரமாவும் விஷ்ணுவும் சகலரில் தவவிசேஷ முடையவராய் அப்பதம் பெற்றவர். காலருத்திரர் பிரளயாகலரில் மலநீங்கி முத்தராய் அப்பதம் பெற்றவர். பிரமவிஷ்ணுக்களுக்கு ஆணவமுதலிய மலங்கள் நீங்காமையால் அவர் பசு வர்க்கத்தவராக எண்ணப்படுவர். உருத்திரரும் வித்தியேசரரும் மலநீங்கிச் சிவசத்தியினால் அதிட்டிக்கப்படுவ ராதலின், அவ்வுரிமை நோக்கிப் பதிவர்க்கத்துள் வைத்து எண்ணப்படுவர். உயிர்களின் பொருட்டுப் பதியினாற் செய்யப்படும் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களும் பஞ்சகிருத்திய மெனப்படும்.

186936

உ

# கனவு மெய்யே.

(திருவல்லிக்கேணி திரு. நல். கண்ணப்ப முதலியாரவர்கள்)

சொப்பனமானது மூன்று விதமாக விளங்கும். அவை இறந்த காலத்தது, நிகழ்காலத்தது, எதிர்காலத்தது என்பனவாம். இறந்த காலத்தது என்பது சொப்பனத்துக்குப் பூர்வம் தன்னுடைய சாக்கிரகாலங்களிற் கண்டபொருள்களையும், அவற்றினநுபவங்களையும் அந்தச்சொப்பனத்திற் காண்பது. நிகழ்காலத்தது என்பது இறந்தகால வெதிர்காலங்களை யபேட்சியாமல், சொப்பனமென்னும் அந்தவொரு காலத்திற்றானே தனக்கு விஷயமாகும் பொருளையும் அதனநுபவத்தையும் கண்டு கூறுதல். எதிர்காலத்தது தூங்கி விழித்தபிற்பாடு சாக்கிரத்தில் தான் அநுபவிக்கப் போகிற பொருளையும், அதனநுபவத்தையும் முன்னதாக வறிந்துகொள்ளுதல்.

இவற்றுள், இறந்தகால சொப்பனத்தை வாசனா சொப்பனமெனவும், நிகழ்கால சொப்பனத்தை அநுபூதி சொப்பனமெனவும், எதிர்கால சொப்பனத்தை அதிர்ஷ்ட சொப்பனமெனவும் அறியவேண்டியது. முன்கண்டபொருள்களைப் பின் வாசனையாற் காண்பது பொய்யாகாது. பின்னர்க்கண் டனுபவிக்கப் போகிற பொருள்களைச் சிவானுக்ரஹத்தால் முன்னர்க்கண்டு மகிழ்வதும் பொய்யாகாது. இடைக்காலத்திற் காணும்பொரு ளிறந்தகால வெதிர்காலங்களி லன்றி யவ் விடைக்காலத்தில் அழியாது நிலைத்தலால், அதுவும் பொய்யாகாது. மூன்று சொப்பனங்களும் மெய்யாக முடிந்தமையால், கனவுபொய்யென்று கூறுதலடாது. இவ்வாறு வியவஸ்தை யுண்டாக விசாரியாமல் இடைக்காலத்தநுபவத்தை எதிர்காலத்து விரும்புவது மசங்கதம். எதிர்காலத்தி லநுபவ மாகாமையால் அதனைப்பொய்யென்னில், எதிர்காலத்தது இறந்தகால நிகழ்காலங்களிலும், இறந்தகாலத்தது நிகழ்கால வெதிர்காலங்களிலும் அநுபவமாகாமையால் அவையும் பொய்யாகும். ஒருவன் தனது ஜாக்கிரகாலத்திற்றானே ஆயிரம்பொன் கொண்டவோர் கிழியை வைத்தவிடந் தெரியாமற்றேடி அது கிடைக்காமலே வருந்துகிறான். முன் வைத்தது பின் கிடைக்காமையால், அதனைப் பொய்யென்று கூறுதல் யாங்ஙனம்? முதலிற் பொற்கிழி கிடைத்து; அது கிடைத்ததென்னும் சந்தோஷத்தை யவனுக்குக்கூட்டிப் போகத்தை நுகர்வித்தலும், உடனே அஃது ஒழிந்ததென்னும் துக்கத்தை யவனுக்குக் கூட்டிப் போகத்தை நுகர்வித்தலும் அவனுடைய வினையின் சேட்டையாக முடிந்தமையால், இரண்டுஞ் சாமஞ்சஸமாயின. இப்படியே இடைக்காலத்துச் சொப்பனத்தையும் கொள்ளவேண்டியது. எங்ஙனமெனின், ஒருவன் தனதுசொப்பனத்தில் ஆயிரம்பொன்கொண்ட வோர்பொற்கிழியைக் கண்டெடுத்தான். அதனைக் கொண்டுபோய்ப் பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்தினான். அதுவரையில் அவனுக்கு அதிக சந்தோஷந்தான்; அவ்வளவே அவனுக்கு நுகர்விக்கத்தக்க சந்தோஷபோகம். அவன் விடிந்தெழுந்து தனது பெட்டியில் பார்த்தால் அஃது இல்லை. யாது காரணமெனின், தான் முன் வைத்ததைப் பின்னு மநுபவிக்கத் தக்க வினைப்போகங் கூடாமையால். இதனால், முன் கிடைத்ததும், அப்



போது சந்தோஷித்ததும் பொய்யாகாது. பின் கிடைக்காதபோது ஸந்தோஷங் கெட்டதாகிய துக்காநுபவம் கைகூடினமையால், இதனையே அந்த வினையானது ஊட்டி நிலைபெறச் செய்தது. மூன்றவஸ்தைகளிலும் அவற்றின் வேறுபாடுகளிலும் எதிரிட்டபொருள்களைக் காண்பதும், அவற்றை யநுபவித்துச் சுகதுக்கங்களி லுழன்றலைவதும் ஆத்மாவேயாகையால், அதனுடைய சுகதுக்கங்களாகிய வினைப்போகம் யாவும் ஸத்தியமென்பது யாவருமறிந்த விஷயமே. இப்படிப் பகுத்தறிந்திடாமல் சொப்பனம் பொய்யென்று சொல்வார் யோசிக்கக்கடவர்.

ஜாக்கிரத்தில் அநுபவமாயிருந்த பொருள்கள் சொப்பனத்தில் முன் வாசனையாலுண்டாகிநுகர்தல் அநுபவம். தன்னுடையவீடுபிள்ளை சொத்து இவைகளைக் காண்பதுதான் அது. இதுதான் இறந்தகால சொப்பனம்.

தனக்கு நாளை ஓர் புதையல் ஓர்குப்பை மேட்டில் கிடைக்கப்போகிறது. அந்தப்படிக்கு அவன் சொப்பனங் காண்கிறான். விடிந்து போய்ப் பார்த்தால், அஃது அப்படியே கிடைக்கின்றது. அன்றியும், ஓர்கன்னிகையை ஓர்பிரபு தனக்குப் பலாத்காரமாகக் கொண்டு வந்து கொடுத்துக் கலியாணஞ்செய்ததாக ஒருவன் சொப்பனங் காண்கின்றான். அந்தப் படியே விடிந்து, அல்லது சில தினங்களில் அது கைகூடுகின்றது. இப்படிப் பட்ட பலவநுபவங்கள் பலரிடத்திலும் விசாரித்தால் விளங்கும். பிரத்யக்ஷகதமாகிய இதுதான் எதிர்கால சொப்பனம்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருப்பெண்ணாகடத்திலிருந்து திருநெல்வாயிலரத்துறைக்குப் போக விரும்பித் தமது தந்தையாராகிய சிவபாதஹ்ருதயர் தோளினின்றுங் கீழிறங்கித் திருப்பாதங்களாலே நடந்து மாறன்பாடி என்னுந் திருப்பதி வந்துசேர்ந்து வழிநடந்த விளைப்பால் பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக் கொண்டு அப்பதியிற்றானே அடியார்களோடு மன்றிரவு தங்கியருளினார். அஃதறிந்த கடவுள் தம்முடைய திருக்குமாரர் திருமேனி வருந்தாவண்ணம் திருவரத்துறையிலிருக்கும் பிராஹ்மணர்கள் யாவருக்குந் தனித்தனியே சொப்பனத்திற்றோன்றி 'நமது குழந்தை ஞானசம்பந்தன் நம்மிடத்துக்கு வருகின்றான். அவன் ஏறுதற்கு முத்துச்சிவிகையும், நிழற்றுதற்கு முத்துக்குடையும், அவன் புகழ்தோன்றவூதுதற்கு முத்துச் சின்னமும் நாம் கொடுக்கின்றோம். அவற்றை நீவிர் பெற்று அவனை யெதிர்கொண்டு போய்க்கொடுங்கள்." என்று கட்டளையிட்டருளி அதனைப் பிள்ளையாருக்குந் தெரிவித்தருளினர். பிராஹ்மணர்கள் விழித்தெழுந்து ஆச்சரிய மெய்தினவர்களாகித் திருக்கோயிலினுள்ளே புகுந்து சுவாமி கட்டளையிட்ட பொருள்க ளங்கிருக்கக் கண்டு மகிழ்ந்து அவற்றைத் தாங்கிக்கொண்டு சிவனடியார்கள் பலர் சூழ வாச்சியங்கள் முழங்கப்பிள்ளையாரை எதிர்கொண்டார்கள். பிள்ளையாரும்அவர்களை எதிர்கண்டனர். முத்துச்சிவிகை, முத்துப்பந்தர், முத்துச்சின்ன முதலியவைகளையும், சிவபெருமான் திருவருளையும் வியந்து "எந்தை யீசனெம்பெருமான்" என்னும் திருப்பதிகம் பாடியருளினார் என்பர். இதனால், கனவு மெய்யே யென்றறியக்கிடக்கின்றது.

# சிவோத்கர்ஷம்.

## ஸ்ரீகிருஷ்ணப் பிரசங்கம்.

(ஸ்ரீ உபய வே. தி. ஈ. ஸ்ரீநிவாசாசாரியாரவர்கள் மொழி பெயர்த்த அநுசாசன பர்வத்து * 48 வது அத்தியாயத்திரட்டு)

சிவபரத்துவ நிரூபண சிகாமணி
பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள்.

"ஐயா! யுதிஷ்டிரரே! அந்த உபமந்யு வென்னும் ப்ரம்மரிஷி, பக்தியுடன் கைகூப்பிக் கொண்டு 'பிரம்மாவினாலும் ரிஷிகளாலும் சொல்லப்பட்டவையும், வேதங்களிலிருந்தும் வேதாங்கங்களிலிருந்து முண்டானவையும், மகான்களினால் ஏற்படுத்தப்பட்டவையும், உண்மையானவையும், எல்லாப்பயன்களையும் ஈடேற்றுகின்றவை யென்று ப்ரசித்தமானவையும், வேதங்களில் தேர்ந்த புத்தியுள்ள தண்டிமகரிஷியினால் பக்தியுடன் சொல்லப்பட்டவையுமான நாமங்களினால் எல்லா உலகங்களிலும் கியாதிபெற்றவரும் துதிக்கத்தக்கவருமான ஈசுவரரைத் துதிக்கப் போகிறேன். யோக்கியர்களும் புகழ்பெற்றவர்களும் தத்வஞானிகளுமான ரிஷிகளாற் சொல்லப்பட்டவையும் பிரம்மலோகத்திலிருந்து மற்ற எல்லா வுலகங்களுக்குமாகக் கொண்டுவரப்பட்டவையுமான வேதத்திலுள்ள சத்தியமான நாமங்களினால் எல்லாரிலுஞ் சிறந்தவரும் முதல்வரும் ஸ்வர்க்கத்தைக் கொடுப்பவரும் எல்லாப் பிராணிகளுக்கும் அநுகூலரும் சுபத்தைத் தருகிறவரும் சாசுவதமான பரப்ரம்மமென்று பிரம்மதேவரால் சொல்லப்பட்டவருமான ஈசுவரனைச் சொல்லப்போகிறேன். யாதவரிற் சிறந்தவரே! நீர் சாவதானமாய் என்னிடம் கேளும். பக்தராகிய நீர் எல்லாவற்றிற்கும் காரணமும் ஈசுவரருக்கும் ஈசுவரருமாகிய பரமசிவனைப் பிரார்த்தித்துக் கொள்ளும். அதனால், அந்த நித்தியமான பரப்ரம்மத்தை உமக்கு நான் சொல்வேன். ஒருவன் யோகியாயிருந்து அநேக நூறு வருஷங்கள் சொன்னாலும் ஈசுவரருடைய மகிமையை முற்றும் விரித்துச் சொல்லமுடியாது. மாதவரே! எவருடைய ஆதியும் நடுவும் முடிவும் தேவர்களாலும் அறியப்படாதவையோ அவருடையகுணங்களை முற்றிலும் சொல்ல யாரால் முடியும்? ஆகிலும், சர்வஜ்ஞரான அந்த மகாதேவருடைய அனுக்கிரகத்தினாலேயே அவருடைய சரித்திரத்தைக் கூடியவரையில் பொருளும் சொல்லும் எழுத்தும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அவருடைய அனுமதிபெற்றுக் கொள்ளாமல் ஈசுவரரைத் துதிக்கமுடியாது. கிருஷ்ணா! வரம்கொடுப்பவரும் பிரார்த்திக்கத்தக்கவரும் உலகவடிவமாயிருப்பவரும் எல்லாமறிந்தவருமான ஈசுவரருடைய நாமங்களின் தொகுதியைப் பிரம்மதேவர் சொன்னபடி சொல்லுகிறேன்; கேளும். பிரம்மதேவர்சொன்னவை பதினாயிரம்நாமங்கள். அவற்றை

* சென்னை: கமர்ஷியல் பிரஸ்: 1923-ஆம் வருஷப்பதிப்பு.



மனத்தினாற் கடைந்து தயிரி லிருந்து வெண்ணெய் போலவும், மலையிலிருந்துபொன்போலவும், பூவிலிருந்து தேன்போலவும், வெண்ணெயிலிருந்து நெய்போலவும் இந்தசாரம் எடுக்கப்பட்டது. எல்லாப் பாவங்களையும் போக்குவதும் நாலுவேதங்களு மடங்கியது மாகிய இது மன ஊக்கத்தோடும் முயற்சியோடும் அறியவும் மறவாமல் கொள்ளவும் தக்கது; மங்களங்களையும் தேகபுஷ்டியையுந் தருவது; ராக்ஷஸர்களைப் போக்குவது; மிகப்பரிசுத்தமானது; பக்தியும் சிரத்தையும் நம்பிக்கையு முள்ளவனுக்கே கொடுக்கத்தக்கது; சிரத்தையில்லாதவனுக்கும் நாஸ்திகனுக்கும் மனத்தையடக்காதவனுக்கும் காரணரூபியான ஈசுவரரைப் பகைக்கிறவனுக்கும் கொடுக்கத்தகாதது; கிருஷ்ணா! அப்படிக் கொடுப்பவன் தன் முன்னோர்களோடும் பின் சந்ததிகளோடும் நரகத்திற்குப் போவான். இதுதான் தியானம். இதுவே யோகம். இதுவே தியானிக்கத்தக்க உயர்ந்த பொருள். சபிக்கத்தக்கதும் இது. ஞானமும் இது. உயர்ந்த இரகசியமும் இது. மரண காலத்தில் இதை யறிந்தாலும் உயர்ந்த கதியையடையலாம். பிரம்மதேவர் முன்னே இதைச்செய்து தேவலோகத்திய ஸ்தோத்திரங்கள் எல்லாவற்றிற்கும் ராஜாவாக ஏற்படுத்தினார். மஹாத்மாவான ஈசுவரருடைய இந்த ஸ்தோத்திரம் அதுமுதலாகத்தான் ஸ்தோத்திர ராஜாவென்று உலகத்தில் கியாதி பெற்றுத் தேவர்களால் பூசிக்கப்படுகிறது. எவர் சிவர்களுக்குச் சிவனும் ருத்ரர்களுக்கும் ருத்ரனுமாக இருப்பவரோ, எவரிடத்திலிருந்து உலகங்களுண்டாகின்றனவோ, மறுபடியும் எவரிடத்தில் லயிக்கின்றனவோ, எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும் அளவற்ற மகிமையுள்ளவராகவு மிருக்கின்ற அந்தப் பரமசிவனுடைய ஆயிரத்தெட்டு நாமங்களையும் என்னிடத்தில் கேளும். புருஷசிரேஷ்டரே! அவற்றைக் கேட்ட பிறகு எல்லா அபீஷ்டங்களையும் பெறுவீர். (சிவசஹஸ்ர நாமம் வரிசையாக வருகின்றது). இவ்வாறு முக்கியமான நாமங்களினால் பகவானை நான் துதித்தேன். துதிக்கத்தக்கவரும் பூஜிக்கத்தக்கவரும் நமஸ்கரிக்கத்தக்கவருமான எந்த சகதீசுவரரை ப்ரம்மாதி தேவர்களும் ரிஷிகளும் உண்மையாக அறியார்களோ அவரை எவன் துதிக்கவல்லவன்! ஆனால், நான் பக்தியை முன்னிட்டு அவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு அந்தப் பிரபுவை இவ்வாறு துதித்தேன். இந்தச் சங்கரர் தான் பரப்ரம்மம். ஆஸ்திகர்கள் சிவபெருமானை அநேக ஜன்மங்களில் பக்தியுடன் ஸ்தோத்திரங்களினால் துதித்துத் தூங்கும்போதும் விழித்துக்கொண் டிருக்கும்போதும் நடக்கும்போதும் உட்காரும்போதும் இமையைத் திறக்கும்போதும் மூடும்போதும் உள்ளன்புடன் மனம் வாக்குக் காயங்களினால் அடிக்கடி தியானிப்பவர்களும் கேட்பவர்களும் கேட்பிப்பவர்களும் ஒருவருக்கொருவர் அவரைப்பற்றியே சொல்லிக்கொண் டிருப்பவர்களுமாகிப் பிறால்

புகழப்பட்டு சந்தோஷமடைந்து சுகப்படுகின்றனர். பிரபஞ்சத்தில் பலபிறப்புக்களிலும் அநேகமாயிரங் கோடி-முறை பிறந்து பாவந் தொலைந்த மனிதனுக்குச் சிவபிரானிடத்தில் பக்தியுண்டாகிறது. முழு அன்போடும் முழுமுயற்சியோடும் காரணமான சங்கரரையே எல்லாவகையாலும் நினைக்கின்றவனுக்கு அவரிடத்தில் ஏகபக்தியுண்டாகிறது. இடையூறில்லாமலும் மற்றத் தேவதைகளிடம் போகாமலும் ருத்ரரிடத்திலிருக்கும் உறுதியான பக்தியானது தேவர்களுக்கே கிடைப்பதரிது; மனிதர்களுக்குக் கிடைப்பதேயில்லை. அவருடைய குணங்களிலேயே மனம் சென்று மேலான சித்திபெறத்தக்க பக்தியானது அவருடைய அனுக்கிரகத்தினால்மட்டும் மனிதருக்கு உண்டாகிறது. சிவபெருமானைத் தவிர மற்றத் தேவர்கள் மனிதர்களுக்குச்சம்சாரத்திலிருந்து மோக்ஷத்தைச்செய்யமாட்டார் என்று உபமந்யு முனிவர் சொன்னார். தர்ம புத்திரரே! பரிசுத்தனாகி பிரம்மசாரி விரதமிருந்துகொண்டு ஐம்புலன்களையு மடக்கித் தியானம் கெடாமல் ஒருவருஷகாலம் இந்த சஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தைப் படிப்பவன் அசுவமேதயாகத்தின் பலனையடைவான்" என்று கிருஷ்ணர் சொன்னார்.

## "ஐயர்" என்னும் சொல் வழக்கு.

ஐயர் என்பதற்கு வியக்கத்தகுந்த செயலுடையார் என்ற பொருள் கோடல் ஒருசாராக, பூஜிக்கத் தக்கவர் என்பதும் பொருளாகும். ஆரியர் பூசிக்கத்தக்க நிலையில் இருந்தமை வெளிப்படை. பெரியபுராணத்து வரும் 'ஐயர்' சேக்கிழார் கூறியதாகும். அதுபற்றிப் பிழை சரி நாட வேண்டியதில்லை. ஆனால், பிராம்மண வருணத்தவருக்கு அது பொருந்தாது என்னும் தமிழ்ப்புலவர்களுமிருக்கின்றார்கள். என்ன பொருமை! அவர்க்குப் பெரும் நஷ்டம் வந்துவிட்டதா? முதலியார், செட்டியார், பிள்ளை, ஐயர் என்பன பண்டை நூல்களில் காணப்படும். 'ஐயர்வே தியரே நாலோ ரறுதொழி லாளர் பார்ப்பார்' என்ற பிறசமயிஒருவர் வாக்காகவந்த ஐயர் என்பது எவ்வருணத்தவரைக் குறிப்பது? ஒரு சார் மதம்பற்றி உண்மையை மறைத்து வியாசங்களில் எழுதுவது பொருத்தமின்றாம். அன்றிக், தன்னொரு பொருள் கருதிக் கூறல் என்னும் குற்றமுமாம். அறிஞர் சிந்திப்பார்களாக.

ஒரு மாணாக்கன்.

## ஐய வினா.

சித்தாந்தப் பொன்மலரில், ஆண்மை-அவம்: ஆணவம் என்றும், மாயா-இமை: மாயேயமலம் என்றும் 121-ம் பக்கத்தில் காணப்பெறுகின்றன. இவை இவ்வாறு பாகுபாடு அடைதற்கு விதியும் பொருளும் அறிந்தோர் வெளியிடின் அந்நன்றி மறவேன்.

சித்தாந்தங்கற்போன்.

# பாண்டித்துரை.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

தெய்வத்தன்மையுஞ் சீரும் பெற்றுவிளங்கும் நம் தமிழ்மொழியை, முற்காலத்து முதல், இடை, கடைஎனமூன்று சங்கங்கள் நிறுவிப் பாண்டியமன்னர்கள் பண்புடன் போற்றி வந்தனர். பாண்டியர்கள் ஆளுகை நீங்கிய பிறகு, தமிழ்மொழி தேடுவாரற்று, ஓரோர் மூலைகளில் ஒட்டிக்கொண்டு வாழ்ந்துவந்தது.

அவ்வாறாய தமிழ்மொழியைப் பண்டைய நிலைபோற் பண்படுத்த எண்ணி, மதுரைமாநகரில் நாலாஞ்சங்கம் நிருமித்து, புலவர்களும், மாணவர்களும் மேன்மையுறச்செய்தவர் பாண்டித்துரை யென்பார்.

தாய்க்குத் தொண்டியற்றுதலே அருங்கடனெனக் கொண்டு பணிசெய்த இவர், செந்தமிழ்ப் பாண்டித்திருநாட்டில், இராமநாதபுரம் என்னும் நகரத்திலிருந்து ஆட்சிபுரியும் சேதுபதி மரபிலுதித்தவர். சேதுபதிகள் என்றுமே புலவர்களை யாதரிக்கும் புண்ணியர்கள். இவரது தந்தையார் பொன்னுசாமித் தேவரென்பார்.

பொன்னுசாமித் தேவர் இப்போது இராமநாதபுரம் அரசாக விளங்கும் ஸ்ரீசண்முகராஜேஸ்வர சேதுபதி யவர்களின் முப்பாட்டனாருடைய ஆட்சியில், இராமநாதபுரம் ஜமீன் மானேசராக இருந்துவந்தார். இவர், சமஸ்தானத்திற்குச் செய்த நன்மைகளுக்குக் கைம்மாறாகப் பாலவனத்தம் என்னும் பட்டினத்தைப் பரிசாக அளித்தனர். அதுமுதல், இவர்கள் பாலவனத்தம் ஜமீந்தார் ஆயினார்கள். பொன்னுசாமித் தேவர் தமிழ்நூல்களில் நிறைந்த ஆராய்ச்சியுள்ளவர். தமிழ் கற்ற புலவர்களுக்கு அளவுகடந்த பொருளையுதவி அவர்களை யாதரித்தவர். இவர் முயற்சிசெய்து அச்சிற் பதிப்பித்து வெளியிட்ட தமிழ்நூல்கள் பல.

இத்தகைய தேவரவர்கட்கு தமிழுலகஞ்செய்த தவப்பயனாய்ப் பாண்டித்துரை மூன்றாம் புதல்வரா யவதரித்தார். இவர் பிறந்த சிலவருடங்களுக்குள், பொன்னுசாமித்தேவர் பரமன்றிருவடி சேர்ந்தனர். எனினும், இளமைப்பருவத்திற்குரிய கல்வியை யிவருக்குச் சிறப்புடனே புகட்டிவந்தனர். தமிழ்த்தாய்க்குற்ற இடுக்கண் நீங்கும் பொருட்டு இறைவனா லனுப்பப்பெற்ற இவர் விரைவிற் படித்துப் பொருளுணருஞ்சக்தியுடையாதல் வியப்பன்றோ? ஆதலின், தலைமாணவனுக்குரிய ஒழுக்கங்களுடன் செவ்வையாகக் கற்றுச் சிறந்த வித்வானாக விளங்கினார். இவருக்குத் தமிழ்பயிற்றிய ஆசிரியர், இப்போது மதராஸ் லெக்சிகன் கமிட்டியில் தலைமைப்பண்டிதராக விளங்கும் ஸ்ரீ மு. இராகவையங்காரவர்களின் தந்தையாராகிய அஷ்டாவதானம் முத்துச்சாமி ஐயங்காரவர்கள். சமயநூல் பயிற்றிய ஆசிரியர் திருவாவடுதுறை யாதீனத்துப் பழநிக் குமாரசாமித் தம்பிரான் அவர்கள்.

இவர், 'விளையும்பயிர் முளையிலே' என்னும் முதுமொழிக் கேற்றவாறு, தமது பதினான்காம் வயதிலேயே கம்பராமாயணத்துள்ள நுண்பொருள்களை யெடுத்துக்காட்டி, அவையோர் வியக்கச் சுவை மிகச் சொற்பொழிவாற்றினார். இதனை,

"இளமையிற்செந் தமிழ்சைவ சித்தாந்த நூல்களெலா மினிது தேர்ந்து
வளமைபெறக் கம்பரா மாயணநுட் பங்களெலாம் வயதீ ரேழில்

தெளிவுபெறப் பலர்மகிழப் பிரசங்கஞ் செய்திடுநற் றிறமை வாய்ந்து
விளைபயிரினியல்முளையில்விளங்குமெனுமுதுமொழியைமெய்ப்பித்தாயே.

என்னும் செய்யுளாலறியலாம். இவருடைய அண்ணன்மா ரிருவரும் அகாலமரணமடையும்படி நேரிடப் பாலவனத்தம் ஜமீன் பட்டமும் இவரைச் சார்ந்தது. தேவரவர்கள், 'யான்பெற்ற வின்பம் பெறுக வியவைய கம்' எனவெண்ணி, சிலகாலம் தாமே ஆசிரியராக இருந்து பலமாணவர்களுக்குப் பயிற்றிவந்தனர். இவரிடம் தமிழ் கற்றமாணவர் யாவரும், இப்போது பலஇடங்களில் நல்ல வித்வசிரோமணிகளாய் விளங்குகின்றனர்.

தமது கல்வியறிவின் நுண்மைகொண்டு பலநூல்களில் ஆங்காங்கே கிடக்கும் நீதிபோதிக்கும் செய்யுட்களை ஆராய்ந்தெடுத்து, 'பன்னூற்றிரட்டு' என்னும் பெயருடன் அச்சிட்டு வெளியிட்டனர். இன்னும் இவர் வெளியிட்ட நூல்கள் பல உண்டு.

இவ்வாறெல்லாம் தமிழ்த்தாய்க்குப் பணியாற்றிய தேவரவர்கள், தமிழ்த்தாய் வீறுபெற்று விளங்கப் பாண்டியமன்னர்கள் தாபித்ததே போன்று ஓர் சங்கம் ஸ்தாபித்தலே சாலுமென நினைத்து, அதுகாலை இராமநாதபுரம் அரசராக இருந்த ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்களிட மறிவித்து, 1902ம்வருடத்தில் மதுரையில் நாலாஞ் சங்கத்தை நலமுற நாட்டினர். சங்கம் நாட்டிய கொஞ்ச காலத்திற்குள், பாஸ்கர சேதுபதியவர்கள் விண்ணுலகெய்தினர். அதனால், சங்கப்பொறுப்புமுழுமையும் தாமே ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. பின்பு, சங்கத்திற்கு அச்சியந்திரசாலை முதலியன ஏற்படுத்தி, சங்கம் சீருற நடக்குமாறு செய்து, மாணவர்களுக்குப் பரீக்ஷைகள் வைத்துப் பரிசுகளும் வழங்கிவந்தனர். இவரால் ஏற்படுத்தப்பெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கம், தமிழ்கற்கும் மாணவர்களுக்குத் தாயெனவமைந்து, தன்னிடத்திருந்து பண்டிதர் பலரைத் தந்துகொண்டே யிருக்கின்றது.

கல்விப்பொருள், செல்வப்பொருள் என்னும் இரண்டும் படைத்த தேவரவர்களைப்போல் தாய்மொழி போற்றத் தமிழர்கள் முன்வந்தால் தமிழ்நாடு மேனிலை யடையும்.

---

## மகா சிவராத்திரி.

இவ்வருடப் பஞ்சாங்கங்களி லெல்லாம் மகாசிவராத்திரி மாசி கஉ குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அன்றுதிரயோதசி பகல்பனிரண்டுநாழிகை வரைதான் உளது. அதற்குமேல் சதுர்த்தசி வருகிறது. மாசி ருOஉ திரயோதசி ருஎஇ நாழிகைவரையும், அதற்கு மேல் சதுர்த்தசியும்இருக்கின்றன. திரயோதசியும் சதுர்த்தசியும் கலந்துவரும் இராத்திரியே உத்தம சிவராத்திரி யெனவும், பகலில் திரயோதசி கலந்துவரும் சதுர்த்தசி மத்திம சிவராத்திரி யெனவும் ஆகமங்கள் கூறுவதால், உத்தமசிவராத்திரி ருOஉ இருக்க, மத்திம சிவராத்திரியைப் பஞ்சாங்கக் கணிதர்கள் மேற்கொள்ள ஏது இன்னதென்பதை இச்சிவநேசன் மூலம் தெரிவிக்க வேண்டுகிறேன். ஆனந்த வருடத்தில் இவ்வண்ணமே பஞ்சாங்கங்களில் கஉ குறிப்பிட்டு, ருOஉ எல்லாக்ஷேத்திரங்களிலும் கொண்டாடப்பட்டிருக்கிறதென்பதும் நோக்கற்பாலது.

சாம்பமூர்த்தி சிவாசாரியார்.

உ

## செந்தமிழ்ச் சைவத் திருத்தொண்டர்.

யாழ்ப்பாணத்து வண்ணைநகரிலே வேளாண் விழுக்குடியிற் றோன்றி, 'இளமையிற் கல்' என்பதற்கிலக்காய் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கர் வழியிற் கற்பவை கசடறக் கற்றுத் தேறிப் பெரும் புலமையுற்று, அதற்குத் தக நைட்டிக பிரமசரிய நிலை பிரியாது நின்று, மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாகக் கடைப்பிடித்தொழுகி, சைவசமயப் பிரசங்கம்—நன்மாணவர்க்குச் செந்தமிழ்க் கல்வி திறம்படக் கற்பித்தல் ஆதிய பெருந்தொண்டே பெரிதும் புரிந்து, சென்னையில் அச்சுப்பொறி யொன்று நிறுவித் தேவாரத் திருமுறை, சிவஞான போத மாபாடியம் முதலிய சைவ நூல்கள் பலவும் சிறந்தமுறையி லச்சிட்டுக் குறைந்த விலைக்கு வழங்கி, செந்திலம்பதியிற் கந்தப்பெருமான் திருப்பெயரால் ஓர் இலவசக்கல்லூரி யேற்படுத்தி, அதில் மாணவர்கட்கு ஊண் உடை யாதியவற்றுடன் செந்தமிழ்க் கல்வி முறையுடன் கற்பிக்கத்தக்க அறப்பணி யாற்றிச் சைவ சதாசார சற்குண சம்பன்னராய் விளங்கிய உயர்திரு சுவாமிநாத பண்டிதரவர்கள், ஆவணித்திங்கள்முதற் பலதல தெரிசனஞ் செய்துகொண்டு,தெரிசிக்க முத்தியளிக்கும் தில்லைபம்பதியில் தமது திருமடத்திற் றங்கி அம்பலவாணர் அருட் கூத்தை யன்புடன் தெரிசித்துக்கொண்டிருந்து, தமது நன்மாணவர் நட்பாளர் பலரும் புடைசூழ்ந்து தேவாராதி திருமுறையோத, இன்னம் பலபிறப் பெய்தற் கிடனின்றிப் பொன்னம்பலத்தான் பொற்கழலிற் றன்னெஞ்சை யிருத்தி இரண்டறக்கலந் தின்புற்றனர் என்னுஞ்செய்தி யறிந்து, செந்தமிழ்த்தொண்டும் சைவத்திருத்தொண்டும் ஒருங்கமைந்த ஒருவரை நம் நாடு பிரிய நேர்ந்ததே யென மனங்கவன்று பெரிதும் பேதுறலாயினேம். திரு. பண்டிதரவர்களின் கல்வியறிவொழுக்கமாதிய நல்லியல் பலவும் நம்நாடு முழுதும் நன்குணர்ந்ததேயாம். நம் சிவநேசன்பாற் பேரன்புடையராய்ப் பன்முறையும் வாழ்த்துப்பாக்களும் மதிப்புரையும் வழங்கியும், திட்ட நுட்ப ஒட்ப நிரம்பிய கட்டுரைகள் வரைந்தனுப்பியும் ஊக்குவித்த உரவோர்களுள் இவரும் ஒருவரே. சைவமுந்தமிழுந் தழைக்கத்தக்க அரும் பெரும் பொருள்கொண்டுள்ள நம் சிவநேசன், 'பஞ்சிகை வடிவுறுது சஞ்சிகைவடிவுடன் வெளிவருதல்சாலச்சிறந்தது.' எனும்அவர்கருத்துக்கியையச் சிவநேசன் அமைந்ததால், அவர்மொழி நிறைமொழியெனநினைத் தின்புறுகின்றேம். பண்டிதரவர்கள் பிரிவாற் கவலும் அவர்தம் நன்மாணவர் நண்பர் உறவினர் முதலோர் தேறுதல் அடையத் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

(ப—ர்)

உ

## சிவநேசன் அறிவிப்பு.

தபால் முத்திரை சகாய விகித உத்தரவு, சென்னை போஸ்ட்மாஸ்டர் ஜெனரலவர்களிடமிருந்து வரத்தாழ்த்ததின் காரணமாக நம் 'சிவநேசன்' தைத்திங்கள் வெளியீடு உரியகாலத்தே சித்தமாகஇருந்தும், இத்திங்களில் இணைத்து வெளியிட நேர்ந்ததென்பதைச் 'சிவநேசன்' வாசக நேசர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். [பத்திராதிபர்]

## கடவுளும் காந்தியும்.

(ஒரு சைவன்வரைவது)

சைவப் பெரியீர்! தமிழகத்துப் பெரியீர்!!

சிவபிரானே சைவசமயக் கடவுள். இச்சமயமே கைவல்லிய மளிப்பது; பாவலர் காவலர் கைக்கொண்டது. இச்சமயத்துப் பெருமையைச் சமணபௌத்த முதுநூல்களும் விளக்கியிருக்கின்றன. தேவகோபம் இன்னதென்று காட்டமுடியாது! சு. ம. நிலையில் சில வாலிபர் கால் தலை தெரியாது தடுமாறுகின்றனர். பஞ்சமர்களைத்தழுவிக் கோயிலினுள்ளும் விட்டால் சமயம் ஏறுமா? சுயராச்சியம் வந்துவிடுமா? தகாத காரியத்தை நிலைநாட்ட முன்னியதால் பூசலும், பூகம்பமும், பொருள்அழிவும், உயிர்ச்சேதமும் வந்து வருத்துவது என்றால்பாவமா? பரமாத்துமா மலையைக் குடைபிடிக்கவில்லையா? மழையில் மகாத்துமப் பேருடையார் பட்ட அவஸ்தை எழுதமுடியுமா? பணம், பணம் என்ற பேய்பிடித்த ஒரு மனிதன் யாரை ரக்ஷிக்கமுடியும்? எல்லாம் ஏமாற்றமல்லவா? எத்தனை முறை பணயாசகம்? பயனேதும் கிடைத்ததா? மனிதனை மனிதன் காக்கமாட்டான். நிலம், நீர், தீ, வளி, வெளி சூரியன், சந்திரன், ஆன்மாவாகத் திகழும் அட்டவடிவுடையா ரிட்டப்படி, நன்மையுந் தீமையும் உலகில் நிகழும். இவ் வுண்மையைத் தெளியுங்கள்!

---

## சிவநேசனுக்கு வாழ்த்து,

**(யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களவர்கள்.)**

சைவமும் செந்தமிழும் தழைத்தினிதோங்கச் சிறந்த விடயங்களைத் தாங்கி வெளிவரும் 'சிவநேசன்' சிறப்புற்று வளருமாறு சிவபெருமானது திருவடிகளைத் தியானிக்கின்றேன்.

---



### பாங்கி தலைமகனைத் தேற்றல்.

114. தன்னைக்கண் டார்பவம் போக்கு முதுகுன்றர் தண்சிலம்பா
மின்னைக்கண் டாலலர் கேதகை போலத்தன் மெல்லியருள்
என்னைக்கண் டாலரு ளெம்பெரு மாட்டிக் கிதஞ்சொலியான்
நின்னைக்கண் டாரத் தழைகொளு வேனின் னினைவகலே(ஙச)

### பாங்கி கையுறை யேற்றல்.

115. வாழைக் குலையினை மஞ்ஞைகள் தீண்டும் வளமுடைத்தண்
கூழைப் பெறுவயல் சூழ்முது குன்றர் குளிர்சிலம்பின்
ஊழைப் புறந்தருந் தாளென வள்ளுவ ரோதியதாற்
காழைப் பொருந்திய நெஞ்சள்கை யுற்றதுன் கைத்தழையே.()

### கிழவோன் ஆற்றல்.

116. விடைகாட் டியகொடி சேர்முது குன்றர் வியன்சிலம்பில்
உடல்வாட்டி யின்ப முயிர்க்கீ பவர்களை யொப்பவின்று
தொடைகாட் டியகுழ றீமொழி கூறிப்பின் சொல்லுமின்பென்
இடைகாட்டி யென்றழை தன்கையில் வாங்கின ளின்புறவே. (ஙசூ)

### இறைவிக்கு இறைவன் குறையறிவுறுத்தல்.

117. பாரோர் தவத்தால் வருமுது குன்றர் பனிவரைமேல்
ஆரோ வொருவர் புனத்தயல் யான்போ யணுகுதொறும்
ஏரோர் பசுந்தழை கைப்பிடித் தேவந் தியம்பிலர்சொல்
காரோர் கருங்குழ லாயவ ரெண்ணங் கருதரிதே. (ஙஎ)

### இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்.

118. கூனும் பிறையணி வான்முது குன்றர் குளிர்சிலம்பில்
மானுங் கலையும் புனத்தரு கேவந்து வன்றலையிற்

---

114. கேதகை - தாழை; அது மின்னலைக் கண்டால் மலர்வது; "மின்பொருட்டினாற் கேதகை மலர்ந்திடும்" (கந்த. மாயைப். 7.) மெல்லியருள் - பாங்கியர்களுக்குள்ளே. அருளும் எம் பெருமாட்டிக்கு. ஆரத் தழை - சந்தனத் தழையை.

115. கூழை - பயிர்களை. தாள் - முயற்சி; "ஊழையு முப்பக்கங் காண்பருலைவின்றித், தாழா துளுற்று பவர்" என்பது இங்கே சுட்டப்பட்ட திருக்குறள். உற்றது என்றது, துணிவு பற்றி.

116. தொடை காட்டிய குழலென்றது பாங்கியை.

றேனுஞ் சுரும்பு மிரைத்திடக் குன்றவர் தேனழிக்கும்
வானுஞ் செறிகுரல் கேட்டோடுதல்பார் வயங்கிழையே.(௩௮)

பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்.

119. வேலைக் கடுவிட முண்டோர் முதுகுன்றர் மென்சிலம்பில்
மாலைக் குழலி மறைப்பதென் னேயினி வார்களிறு
கோலைக் கொடுபுனத் தேவந்த தோவென்ற கொற்றவர்நின்
மாலைக் கொடுவண்ட லாடுழைக் கண்டனன் வந்திடவே. (௩௯)

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

120. திருந்தா ரரணம் பொடித்தோர் முதுகுன்றர் செஞ்சிலம்பில்
விருந்தா யொருவ ருடல்மெலி வோடு வியன்றழையை
வருந்தா மலர்க்கை கொடுவந் தனரென நம்மரபிற்
பொருந்தாமொழியைப்புகலத்தகுமோபொலங்கொடியே.(௪௦)

பாங்கி என்னை மறைத்தது என்னெனத் தழால்.

121. முன்பாத வன்பல் லுகுத்தோன் முதுகுன்றில் முண்டகமார்
தன்பாத மேதன் னடியார்க் கருளுந் தகைமையைப்போல்
உன்பாத மேதுணை யென்றிருந் தேனை யொறுத்தியென்றால்
என்பா தகமன்றி யானென்சொல் வேன்மல ரேந்திழையே.()

பாங்கி கையுறை புகழ்தல்.

122. செந்தா திதழிச் சடையார் முதுகுன்றர் சீர்வரையார்
தந்தார் தழையிது வாடாது தன்னைத் தரித்திடுமுன்
சிந்தா குலங்க ளகற்றுவ தென்றுஞ் சிலம்புறுவோர்
இந்தார் முகத்தா யணியத் தகுமீ தெளியதன்றே. (௪௨)

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்.

123. வாழு முதுகிரி யார்வெற்பர் காட்டினர் வஞ்சிகண்ணால்
வீழு மதகரி தன்பிடி யோடு விளைதினையும்

---

118. இரைத்திட - ஒலிக்க. குன்றவர் - வேடர். மானும் கலையும் வந்து குரலைக் கேட்டு ஓடுதலைப் பாரென்று முடிக்க.

119. கோலை - அம்பை. மாலை - மயக்கத்தை. வண்டலாடு உழை - விளையாடும் இடத்தில். கொற்றவர் வந்திடக் கண்டனனென்க.

120. விருந்தாய் - புதியவராகி.

121. பி-ம். 'உகுத்தோர் முதுகுன்றர்'

122. இதழி - கொன்றை. சிலம்புறுவோர் அணியத் தகும்.



சூழுங் கழையும் வயிறார மேய்ந்து தாலங்கருவி
தாழும் புனலுண் டசோக நிழலிற் றயங்குதலே. (௪௩)

தோழி தலைவனை மறுத்தற்கு அருமை மாட்டல்.

124. வேணித் திருமுடிச் சீர்முது குன்றர் வியன்சிலம்பர்
ஆணிப் பசும்பொன் னனையாய் புனத்தி னயலடைந்தாற்
பாணித் தழையொடு முன்னிற்பர் வந்து பணிமொழிகள்
பேணிப் பணிபவர்க் கென்னா லரிதினிப் பேசுவதே. (௪௪)

தோழி தலைமகன்குறிப்பு வேறாக நெறிப்படக்கூறல்.

125. முனிவோர் பரவுந் திருமுது குன்றர் மொழிவரையார்
பனியார் நறுந்துள வேய்ந்தவ னோடு பகைகொளவோ
முனிவார் மறலி யொடுபகை கொண்டு முரணுறவோ
குனிவார் சிலைநுத லாயறி யேனெஞ்சிற் கொண்டதுவே.(௪௫)

தோழி தலைவியை முனிதல்.

126. மானென்று கையர் பழமலை வாணர் மணிவரைமேல்
தேனென்று பூங்குழன் மின்னே யெனதுறு சிந்தையின்கண்
ஊனென் றலவுயி ரொன்றே யெனவிங் குறுதலினால்
நானின் றடாமொழி சொல்தீங் கினைமனம் நண்ணலையே. (௪௬)

தலைவி பாங்கியை முனிதல்.

127. கோழிக் கொடியன் பிதாமுது குன்றர் குளிர்சிலம்பிற்
பாழித் திணிபுயத் தோர்வே லவனைப் பணிபுரிவோர்
சூழிப் புனத்தயற் கண்டே னெனும்பழி சொல்லினையால்
ஆழிப் புவியிடை யிவ்வல ரெங்ஙா னகலுவதே. (௪௭)

தலைவி கையுறை ஏற்றல்.

128. சேணும் பரவுந் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பிற்
காணு மயிலியற் பொன்னனை யாய்நின் கருத்தினுளே

---

123. வஞ்சி: விளி. கழை - மூங்கில். வெற்பர் தயங்குதலைக் கண்ணுற் காட்டினரென்க.

125. "விரையூர் குழலியர்" (தஞ்சை. 102) என்னும் செய்யுளைப் பின் பற்றியது இது.

126. சிந்தையின்கண் உறுதலினாலென்க.

127. பணி புரிவோர் - பாங்கியர் முதலியோர். ஓர் வேலவனைக்கண் டேனென்னும் பழியை.

பூணும் படிய விடமில் புணர்முலைப் பூவையர்பூண்
நாணு மலர்ச்சொலுங் காப்பதுண் டேற்றமை நல்குவையே. ()

இறைவி கையுறை ஏற்றமை
பாங்கி இறைவற்கு உணர்த்தல்.

129. மழையைக் கொளும்பொழில் சூழ்முது குன்றர் மணிவரையாய்
தழையைப் பிடியென வீதலும் வாங்கித் தடங்கணொற்றிக்
குழையைத் தரித்திடு வார்செவிச் செவ்விதழ்க் கொம்பனைதன்
இழையைப் பொருந்தும் புணர்முலை மேல்வைத் திருந்தனளே. (௪௯)

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்.

130. அருள்விழி கொண்ட பழமலை நாத ரவிர்சிலம்பில்
உருள்வலி கொண்ட விரதமன் றாவிண் ணுயர்தருவின்
இருள்குடி கொண்ட மலர்செறி காவின் றிலங்கிழையின்
திரள்குடி கொண்ட முலையேந் தொடலை செயுமிடமே. (௫0)

பாங்கி குறியிடத்து இறைவியைக் கொண்டுசேறல்.

131. உணர்வார்க் கரிய திருமுது குன்ற ருயர்சிலம்பிற்
றுணர்வார் பொழிலிற் கொடியூச லாடிச் சுனைகுடைந்து
வணர்வார் குழலா ரொடுமலை யேறி மலர்பறிப்பப்
புணர்வா ரிளமுலைப் பூங்கொடி யேயாம் பொருந்துவமே. (௫௧)

பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கல்.

132. தம்மா திடத்துறை செய்முது குன்றர் தடஞ்சிலம்பில்
எம்மாவி யன்ன விலங்கிழை வார்குழ லேந்திழையாய்
இம்மா தவிப்பந்தல் நீவிளை யாடுக வேர்மலிந்த
செம்மா துறையுந் திருமலர் கொய்திவண் சேர்குவனே. (௫௨)

---

128. பூணாகியநாணும்: "பெண்பா லவர்கட் கணியாய்ப் பிரியாத நாணும்" சீவக. 1961. நாணையும் பழிமொழியையும் காக்கும் எண்ணம் உன் கருத்தினுள்ளே இருப்பின் கொடுப்பாயாக.

129. கொம்பனை என்றது தலைவியை.

130. உருள் - சக்கரம்; 'வட்டக்காலாற் சிறந்த தேர்' என்பர், ந. தொடலை - மாலை. இடம் கா என்க.

பி-ம். 'உருள்படி கொண்ட'

131. உணர்வார்க் கரிய திருமுதுகுன்றர்: "உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்" (சிற். 9), "உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்" (பெரிய.) வணர் - வளைவு.

132. மாதவி - குருக்கத்தி.



தலைவி இறையோனிடத் தெதிர்ப்படல்.

133. இளங்கதி ரென்ன வெழுமுது குன்றனை யேத்தினர்தம்
உளங்கவ ராணவ வல்லிரு ணீங்கி யுறுவதுபோல்
விளங்கிய மாமய லாகிய காரிருள் வீந்திடவே
களங்கமில் மாமதி யிக்கா வகத்தினிற் கண்டனனே. (௫௩)

புணர்ச்சியின் மகிழ்தல்.

134. மண்ணின்ப மெய்த வருமுது குன்றர் மணிவரைமேல்
விண்ணின்ப முண்டென வாகமத் தாற்சிலர் வேண்டுவர்காண்
கண்ணின்ப மெய்த வுறுமமு தாகிய காரிகைசேர்
பெண்ணின்ப முற்றபின் பேரின்ப முண்டெனப் பேசிலமே. ()

புகழ்தல்.

135. விண்டென் றுங் காணாப் பதமுது குன்றர் வியன்சிலம்பில்
வண்டொன் றுபூந்தொடை வார்குழ லாய்நின் மணியிதழ்த்தேன்
கண்டென் றுசொல்லி னதுவுமோர் பெண்ணைக் கலப்புளதால்
விண்டொன் றமுதஞ் சுவைக்குடைந் தேமெய் வெளுத்ததுவே. (௫௫)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

136. வேளைப் பொடித்த திருமுது குன்றர் வியன்சிலம்பில்
நாளைக் கடுத்த மணிக்கோவை சூழ்ந்து நறவுமிழ்ந்த
பாளைக் கமுகு நிகர்மிடற் றாய்வரு பாங்கியொடுன்
தாளைப் பரவுறுஞ் சேடியர் கூட்டத்தைச் சார்ந்தருளே. (௫௬)

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்.

137. சூலுக் குளைந்து சரிமுகச் சங்கஞ் சுழல்வயல்சூழ்
வேலிக் கிணைந்த கழைமுது குன்றர் வியன்சிலம்பில்

---

133. இளங்கதி ரென்ன வெழுமுது குன்றர்: "உதயா திபனென நின் றார்தம் வெங்கையில்" வெங்கைக் கோவை, 15.

134. காரிகை - அழகு.

135. விண்டு - திருமால். கண்டு - கற்கண்டு. அதுவும் ஓர் பெண்ணைக் கலப்பு உளதால் - அந்தக் கற்கண்டும் ஒரு பனையின் தொடர்பை உடையது; பனையிலிருந்து கற்கண்டு செய்வதுண்டு. அதுவும் தான் இன்பம் பெற வேண்டி ஒரு பெண்ணைக் கலத்தலை உடையது என்பது இங்கே தோன்றும் வேறுபொருள்.

136. நாளைக் கடுத்த - நட்சத்திரத்தை ஒத்த.

கோலுக் கிணைந்த நெடுங்கூர் விழியுடைக் கொம்பனையைம்
பாலுக் கியைந்த மலர்கொணர்ந் தேனிவை பார்த்தருளே.(கஎ)

பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

138. அடியர்க் கிரங்குந் திருமுது குன்ற ரணிவரைமேற்
படியர்க் கமுதங் கிடைத்தென நின்றிடும் பைந்தொடியாய்
நெடியற் குறழு முயர்பொழின் மென்மலர் நீயணிந்தாய்
மிடியர்க் கரிய திருவனை யாரிட மேவுவையே. (ருஅ)

பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல்.

139. பிறவா வழியருள் சீர்முது குன்றர் பெருவரையாய்
பறவாப் பசுங்கிளி போல்வா ளிரங்கப் பரிவுறுத்தின்
உறவா யுணைச்செய் யெமக்கிட ரெய்த லுறுமெனநீ
மறவா தொழியின்று போலென்று நெஞ்சிடைமன்னவனே.()

பாங்கி தலைமகனை உலகியல் மேம்பட விருந்து விலக்கல்.

140. பரைப்பால் விளங்க வுறுமுது குன்றர் பனிவரையீர்
மரைப்பா லுலையிடைச் செய்தினைச் சோறு மறித்தசையும்
வரைப்பால் மதுவுட னுண்டிலைக் கூரை வதிந்துசென்றால்
தரைப்பா லுமக்கு வருங்குறை யேதினிச் சாற்றுவிரே. ,(சூ0)

விருந்து இறை விரும்பல்.

141. நீரார் சடையர் திருமுது குன்றர் நெடுஞ்சிலம்பிற்
காரார் குழலீ ருமதிரும் பாடியிற் கான்மரைப்பால்

---

137. கழை - கரும்பு. கோலுக்கு - அம்புக்கு. கொம்பு அன்னை - பூங்கொம்பு போல்வாய். ஐம் பாலுக்கு - கூந்தலுக்கு.

138. படியர்க்கு - பூமியிலுள்ளவர்களுக்கு. கிடைத்தென - கிடைத்ததைப்போல. நெடியற்கு உறழும் - திருமாலை ஒத்த; நெடியற்கு: உருபுமயக்கம். மிடியர்க்கு - வறியவர்களுக்கு.

139. கிளி போல்வாளென்றது தலைவியை. பரிவுறுத்தின் - துன்பமுறச் செய்தால்.

140. பரைப் பால் - உமாதேவியாருக்குரிய பாகம். மரைப்பால் உலையிடைச் செய் - மரையாவின் பாலுலையில் செய்யப் பெற்ற. மறித் தசை - மான் நிணம். வரைப்பால் மது - மலையினிடத்தே உள்ள தேன். இலைக் கூரை: "இலை வேய் குரம்பை" மதுரைக். 310.



சீரான மானின் றசைவார் கிழங்கு செறிநறுந்தேன்
பாரார் விரும்பு மமுதல வோநீர் பகர்வதென்னே. (சூக)

## கக. பகற்குறி.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண்டிரங்கல்.

42. சொன்மாலை வேய்ந்த திருமுது குன்றர் சுடர்க்கிரியார்
வன்மாலை தந்து பிரிந்தே கியபின் வளர்முலையாய்
பொன்மாலைத் தேரினன் மேல்பாற் கடலிற் புகுந்திடுமுன்
புன்மாலைப் போது வரவாத் துன்பம் பொருந்தியதே. (க)

பாங்கி புலம்பல்.

143. நந்திக் கொடியுடை நன்முது குன்றர் நவில்சிலம்பில்
தந்திக் கிணையெனும் பூண்முலை யாள்மெய் தளர்வுறவே
பந்திப் புரவி யுடைத்தே ரினனெனப் பார்புகல்வோன்
அந்திப் பொழுதை வருவித்து வெய்யவ னாயினனே. (உ)

தலைவன் நீடத் தலைவி வருந்தல்.

144. முனிவோர் பரவுந் திருமுது குன்றினர் மொய்வரைமேல்
தனியேனை யிங்குற வாயளித் தேகுந் தடம்புயத்தார்
பனிமா மலர்கொய்து குன்றெதிர் கூவியிப் பைங்கொடியின்
இனியார் வருமுன்ன மிங்குவந் தேகுற வெண்ணிலரே. (ங)

தலைவியைப் பாங்கி கழறல்.

145. தேடிப் பதியைக் குலக்கொடி யார்க டெருமரல்பார்
பாடிப் புலவர் தொழுமுது குன்றர் பனிவரையார்
கூடிப் பிரிந்தன ரென்றே மனத்துயர் கொண்டுமிக
வாடிப் புலம்பலை நீயொழி வாய்நன் மலர்த்திருவே. (ச)

---

141. பாடி - இங்கே குறிஞ்சிநிலத்து ஊர். மரை - ஒருவகை மிருகம்.

142. தேர் இனன் - தேரையுடைய சூரியன்; இனன் - சூரியன்; தேரையுடையவனெனினும் பொருந்தும்.

143. வெய்யவன் - சூரியன்; தீய செய்கையை யுடையவனென்பது மற்றொரு பொருள்.

144. இனியார் - ஆயத்தார்.

145. பதியை - கணவர்களை. குலக் கொடியார்கள் - கற்புடைய மகளிர். புலம்பலை - புலம்புதலை.

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்.

146. வனத்தன்பில் வேடரைப் போற்சுந் தரனை வழிமறித்துத்
தனத்தன்பி னுற்கொள் பழமலை யார்தந் தமிழ்க்கிரியிற்
புனத்தன்பர் போலப் பொருந்தின ராகிப் பொருந்திலர்தம்
மனத்தன்பிலார்க்குப்பலவார்த்தைபேசின்வருவதென்னே. ()

தலைவி பாங்கியோடு பகர்தல்.

147. முன்ன மயற்கருள் செய்முது குன்றர் மொழிவரையில்
அன்ன மருந்தின் மனமகிழ் செய்யு மதுவிலையேற்
சின்ன முறுதலும் போலே தலைவர் செறிவிரிவால்
வன்னம் பிறழ்விழி மாதே மகிழ்துயர் வந்தனவே. (௬)

தலைவியைப் பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

148. நனைகா வலர்பொழி சேர்முது குன்றர் நவில்சிலம்பிற்
புனைகா வலரிடைப் புந்திவைத் தாசை பொருந்தினைநீ
தினைகாவல் செய்திட வைத்தநம் மன்னை தெரிந்தனளேல்
மனைகாவ லாக விருத்திடி னென்செய்வம் வார்குழலே. (௭)

நீங்கற்கு அருமை தலைவிநினைந் திரங்கல்.

149. பிறக்கு முயிர்க்குத் துணைமுது குன்றர் பெருவரையின்
பறக்குங் குலத்தினு ளன்றிலம் பேடை பதிபிரிந்தால்
இறக்கு மெனிற்கடல் சூழ்புவி தன்னிடை யேந்திழையார்
பொறுக்குந் துயரது வன்றுலென் னுயி பொறுப்பரிதே. (௮)

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்.

150. பார்மே லமரர் பணிமுது குன்றர் பனிவரைமேற்
கூர்வே லனைய விழிநீரை மாற்றிக் கொடியிடைநந்
தார்மேல் விளங்கும் புயத்தார் வரவினைச் சாற்றுதல்போல்
தேர்மே லசைத்த மணிக்குரல் கேளின் செவியுறவே. (௯)

146. பழமலைநாதர் சுந்தரமூர்த்தியை வழிமறித்துத் தனத்தைப் பறித்தது திருமுருகன்பூண்டியில்.

147. அயற்கு - பிரமதேவனுக்கு. அது - அவ்வன்னம். செறிவு இரிவால் - செறிவாலும் இரிவாலும்; நிரனிறை. வன்னம் - நிறம்.

148. நனையைக் காவிலுள்ள அலர் பொழிகின்ற; நனை - கள்.
பி-ம். 'பொருந்தினமேற்'

149. பறக்கும் குலம் - பறவைக் குலம். பதியென்றது ஆண் அன்றிலை. அது வென்றது 145 - ஆம் செய்யுளிலுள்ள பாங்கியின் கூற்றை.
பி-ம். 'துயரது வென்றால்'

150. மாற்றி மணிக்குரலைக் கேளென இயைக்க.

186936

# செய்தித் திரட்டு.

திருநீடூர்:—முனையடுவார் நாயனார் திருவவதாரஸ்தலம். இதில் அறை கொண்டவேணம்பி முனையடுவார்க்குச் சைவத்திருவாளர் சே. சு. அருணை லம் பிள்ளையவர்களின் பெருமுயற்சியால், அரிமழம் திருவாளர் அ. அரு. ண்ணாமலைச் செட்டியாரவர்களது பெரும்பொருளுதவியும் பிறருதவியுங் காண்டு வேயுறுதோளிபங்கராகிய அருட்சோமநாதர் திருவருணலத்தால் ருமடாலயத் திருப்பணி செய்யப்பெற்று, தை ௨௨ திறப்புவிழாவும், முனையடுவார் நாயனார் திருவுருவ ஸ்தாபனமும், மாகேசுவர பூசை சைவ மெய்யன்பர்களின் மகோபந்நியாசம் முதலியனவும் சிறப்பாக நடைபெற் ன.

பூரிஜகந்நாதம் ஸ்ரீலஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்:—சென்னை மாகா ணத்தில் பல மாதங்களாகத் திக்குவிஜயஞ் செய்து, மதுரை தேவகோட் டை காரைக்குடி யாதிய நகரங்களிலெல்லாம் சவர்ணதர்ம பிரசாரம் வே தாந்தமாகப் புரிந்து வெற்றியை நிலைநாட்டி வருகின்றார்கள். இவ்வாண் டில் வேதோக்தமான பிரசாரத்துக்குச் சுவாமிகள் விஜயஞ் செய்திருக்க ம், வேதவிருத்தமான பிரசாரத்துக்கும் வீணர் பலர் நாணமில்லாது வெளிவரலாயினாராயினும், வீணரவாரங்க ளாகிய இருள், சுவாமிகளது பிரபலப்பிரமாண வசனப் பிரகாச வொளியினால் இரிந்தொழிய, சுவாமிக ளது சதுரப்பாடே ஓங்கி மிளிர்கின்றது.

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்;—இதில்முன்னமே திருவாளர்களான எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல். அவர்கள் புரொபஸராக வும், ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்களும், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் பிறரும் தமிழாசிரியர்களாகவும் இருந்து தமிழை வளர்க் கின்றார்கள் என்பதோடு, மகிபாலப்பதி பண்டிதமணி திருவாளர் மு. கதி ரேசச் செட்டியாரவர்களும் தை ௨௩௨ அங்கு தமிழ் விரிவுரையாளராக அமர்ந்துள்ளார்கள். இது தமிழ்வளர்ச்சிக்கு ஏதுவாகவும், தமிழ்ப்புலவர் பெருமக்கள் ஒருங்குகூட்டி அளவளாவுதற்கு அநுகூலமாகவும் இருப்பது மகிழ்ச்சிக்குரியதே. திருவாசகம் திருவம்மானை 'விண்ணாளும் தேவர்க்கு' என்னுந் திருப்பாசுரத்தில் 'தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டா னை!' எனவும், 'அண்ணாமலையானை' எனவும் அமைந்திருப்பது இதற்கு ஒரு பொருத்தம் போலும். இப்பல்கலைக் கழகம் சைவமும் தமிழுந் தழை த்தினி தோங்கச்செய்ய 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்து, வையகம் பொலிய மன்றுளாடும் ஐயர் அருள்புரிவாராக!

இதனை நிறுவிய தலைவரவர்கள் பிறந்தநாட் பாராட்டுவிழா, இம்மதி ௨ (14—2—1934) புதன்கிழமை, மகா-௱-ஸ்ரீ ராவ்பகதூர் எஸ். இ. அரங்கநாதன் M. A. I. E. S. அவர்கள் தலைமையில் நன்கு நடைபெ றும்; மகா-௱-௱ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் B. A. B. L. அவர் களால் வரவேற்புரை வாசித்து அளிக்கப்பெறும் என்னும் அழைப்பு வரப் பெற்றோம்.

திருச்சிராப்பள்ளி:—தஞ்சாவூர்க் குளத்தெருவில் ஸ்ரீகுன்றிமணி சுவா மிகளின் 102-வது குருபூசை தை ௨௨ உத்திராடநாளிற் சிறப்பாக நடை பெற்றது.

தூத்துக்குடி:—சைவசித்தாந்த சபையின் பொன்விழா தை ௰௨ கோ வை சைவத்திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்களால் தொ டங்கி, மகிபாலப்பதி பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் தக்கபேரறிஞர்களின் விரிவுரைகளுடன் சிறப்பாக மூன்று தினங்கள் நடைபெற்றன.

# சதாசார ஸம்ரக்ஷண சபை.

திருச்சிராப்பள்ளி ஜில்லா, கரூர் தாலுகா, பேரணி கிராமத்திலுள்ள இச் சபையில், 19-10-33 ல் ஸ்ரீமான் சி. ஆளவந்தார் ராமாநுஜதாஸர் அக்கிராசனத்திற்கூடிய பெருங்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாவன:—தீண்டாதார் ஆலயப்பிரவேசம் முதலான பல மசோதாக்களை உட்கொண்டிருக்கிற தீண்டாமை விலக்கு மசோதாவை ஸர்க்குலேட்பண்ணி 30-6-34க்குள் முடிவுக்குக் கொண்டுவர அஸெம்பிளி சட்டசபை செய்ததீர்மானத்தை நமது அரசாங்கத்தார் மஹாஜனங்களுடைய இஷ்டத்தைத் தெரிந்துகொள்வதற்காக அதிகார தோரணையிலாவது கமிஷனர் மூலமாயாவது அனுப்பப்போகிறார்கள். தீண்டாமைவிலக்கு முதலான விஷயத்தைப்பற்றி எவ்விதமாகக்கேட்டாலும், நமது இந்து வேதசாஸ்திர நியாயங்களையும், பழைய வழக்க ஒழுக்கமான தர்மங்களையும்தெய்வஸாக்ஷியாக உள்ளபடி மனதிற்கொண்டு நவீனநாகரீக சீர்திருத்தக்காரர்களுடைய சுயநலமான வலையிலும் சுயமரியாதைச் சங்கத்தார்களுடைய நாஸ்திகமானமோஹத்திலும் அகப்பட்டு அதர்மமானவழியில் செல்லாமல் தர்மமார்க்கத்தில் நின்று தீண்டாமைவிலக்கு செய்யக்கூடாது என்பதை உறுதியாய்ச்சொல்லவேண்டுமென இந்த ஸபை தெரிவித்துக்கொள்ளுகிறது. இனி, தேவஸ்தானம் டிரஸ்டிகளுடைய எலக்ஷன் காலங்களில் ஸநாதன தர்மக்கொள்கையுள்ளவர்களுக்கு ஓட் பண்ணவேண்டுமென்றும், ஸநாதனிகள் இதுபோல் நோட்டீசுகளச்சிட்டு ஒவ்வொரு ஊர்களிலும் பிரசுரம் செய்யவேண்டுமென்றும், இந்த நோட்டீஸை எல்லோருக்கும் காட்டுவதுடன் முன்போல் பட்வாடா செய்யவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறது.

**பரிமணங்குடி:**—சண்முகநாத சுவாமி கோயிலில், கார்த்திகைச்சோமவாரங்கள், திருக்கார்த்திகை, மார்கழிமீ கார்த்திகைத்தினங்களிலும், தை ௧௧ கார்த்திகைநாள் கொடியேற்றி ௧௭ பூசத்திருநாள் வரையிலும், ௨௧ உத்தரநாளிலும் திருமஞ்சன திருவாராதனைகளும், சைவசன்மார்க்கவிரிவுரைகளும், பிறவும் சிறப்பாக நிறைவேறின.

**உடற்பயிற்சி:**—இதுபற்றி இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது சுயமரியாதை வாலிபர் மகாநாட்டில், கீழச்சிவப்பட்டி உடற்பயிற்சி யாசிரியர் திரு. லெ. சோமசுந்தரனார் செய்த பிரசங்கம் புத்தகவடிவத்தில் நம் பார்வைக்கு வந்தது. அதிற் காட்டியுள்ள உடற்பயிற்சிக்குரிய வழிகள் பலவும் பொருத்தமானவைகளே. அவைகளுடன், திருக்கோயில் சூழ்தல் தெய்வம் பராவிப் பணிதல் ஆதிய திருத்தொண்டுகளையும் முதன்மையாக இசைத்துக்கொண்டால் தெய்வீக சக்தியுடன் உடல்வலியும் திருவருள்வலியும் பெறலாமென்பதில் ஒரு சிறிதும் ஐயமின்று.

**திருத்தம்:**—கார்த்திகைத் திங்கள் வெளியீட்டில் 'ஓர்ஐயம்' என்னும் தலைப்பின் கீழுள்ள 6-வது வரியில் 'ஸ்ரீசுப்பிரமணியர்' என்பதை 'ஸ்ரீவிநாயகர்' எனக் கொள்க. 'சிவதாசன்' எ. முத்தையன்.

---

## "சிவநேசன்" ஆண்டுத்தோகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2—4—0 | அதற்கு மூலதனம் | ரூ 30—0—0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3—0—0 | அதற்கு மூலதனம் | ரூ 40—0—0 |
| தனிப்பிரதி | அணா 0—3—0 | | |

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.